விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 14 சனிக்கிழமை (30.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 346

### தமிழரின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய

# நல்லிணக்க பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்


## 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது நல்லிணக்க செயற்பாடுகளில் உள்ளடங்கும்

### கோட்டாவை வலியுறுத்தினார் மோடி

*(புதுடில்லி)*

**இலங்கையில் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவவை குறித்த அபிலாஷைகளை நிறைவேற்றும் நல்லிணக்க நடைமுறையொன்று முன்னெடுக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். மேலும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது நல்லிணக்க செயற்பாடுகளில் உள்ளடங்கும் எனவும் சுட்டிக் காட்டினார்.**

*(23ஆம் பக்கம் பார்க்க)*



### வட மாகாணத்தில்
## மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு பருவப்பெயர்ச்சி காலநிலை காரணமாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மழையுடன் கூடிய காலநிலை தொடர்ந்தும் அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, 23

## பதவியிலிருந்து விலகுகிறார்
### மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாக சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத் 23

# தமிழ் மக்கள் சொந்த இடத்தில் சுதந்திரமாக சகல உரிமைகளுடன் வாழ வேண்டும்

### ஜெய்சங்கர் கோட்டாபயவிடம் நேரில் வலியுறுத்து

(புதுடில்லி)

இலங்கையில் போரால் இடம் பெயர்ந்த தமிழர்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்தும் திட்டத்தை புதிய அரசு தொடர வேண்டும்.

அவர்கள் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழும் நிலைமையை புதிய அரசு ஏற்படுத்த வேண்டும் என இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேரில் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அந்நாட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரை 23

### டிசம்பர் முதல்
## ரயிலில் பிச்சை எடுக்கத் தடை

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ரயில்களில் பிச்சை எடுப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக ரயில் சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது. 23

## தாலிக்கொடி உட்பட 20 பவுண் நகை திருட்டு

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வீடு புகுந்து தாலிக்கொடி உட்பட 20 பவுண் நகை திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை புன்னாலைக்கட்டுவன் மூன்றாம் சந்திப்பகுதி 23

### எதிர்க்கட்சித் தலைவராகிறார் சஜித்

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணிலே தொடர்ந்து நீடிப்பார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமிக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளார்.

எனினும் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் செயற்படுவார் என கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படும் கட்சிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஐ.தே.க தலைவர் ரணில், பிரதித் தலைவர் சஜித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கும் முடிவினை சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது. (ம-3)

## இந்திய மீனவரின் படகுகள் திரும்பக் கொடுக்கப்படும்

### இலங்கைக்கு விஜயம் செய்யுங்கள் இந்தியப் பிரதமருக்கு கோட்டா அழைப்பு

(புதுடில்லி)

இலங்கையால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை திரும்பக் கொடுக்க முயற்சிகளை எடுப்போம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 23

### 303 கிலோ 900 கிராம்
## பீடி இலைகள் யாழில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - இலப்புக் கடவாய் கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது 303 கிலோ 900 கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பீடி இலைகள் 8 பொதிகளில் இருந்து மீட்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

கையகப்படுத்தப்பட்ட 23

### திருகுவலைக் கட்டையால்
## கணவனை அடித்துக் கொன்ற மனைவி!

(மட்டக்களப்பு)

குடும்பத் தகராறு காரணமாக தேங்காய் திருவும் திருகுவலைக் கட்டையால் 23

### இடைக்கால அரசிலேயே இந்த ஆட்டம்

## கள்ளர்களுக்கு பயந்து பொலிஸார் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

உறுதியான அரசாங்கம் ஒன்றினை உருவாக்க முன்னர், இடைக்கால அரசாங்கத்திலேயே அச்சுறுத்தல், அடக்குமுறை மற்றும் தான்தோன்றித்தனமாக செயற்படும் அரசாங்கம் உறுதியான ஆட்சி ஒன்றினை உருவாக்கிக் கொண்டால் நிலைமை என்னவாகும் என ராஜபக்ஷக்களை ஆதரித்த மக்களே சிந்தித்துப் பாருங்கள் என ஜேவிபி பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களை அச்சுறுத்தல் கலாசாரம் மீண்டும் தலைதூக்கி விட்டது. தேர்தலுக்கு முன்னர் இருந்தே நாம் இந்த காரணிகள் குறித்து அதிகமாகவே தெளிவுபடுத்தியுள்ளோம். தொடர்ச்சியாக மக்களுக்கு கூறினோம். இன்று அது 23

# பார்த்தெழுதவிடாத ஆசிரியர்கள் மீது மாணவர்கள் தாக்குதல்

(அம்பாறை)

பரீட்சையின்போது தாம் மறைத்து வைத்திருந்த சிறு குறிப்புகள் எழுதப்பட்ட துண்டுகளை பார்த்து எழுதுவதற்கு அனுமதிக்காத பரீட்சை மேற்பார்வையாளர்கள் மீது, ஆத்திரம் கொண்ட மாணவர்களும், அவர்களுடன் வந்த குழுவினரும் சேர்ந்து நடத்திய தாக்குதலில் காயமடைந்த மேற்பார்வையாளர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. (ம-3)

# பேருந்து சாரதி மீது வரணியில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வரணி முள்ளி பகுதியில் இ.போ.ச பேருந்தை மறித்த குழுவினர் சாரதியை சரமாரியாக தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்

இ.போ.ச பேருந்து ஒன்று நேற்று மாலை கொக்குளாயில் இருந்து வரணி முள்ளி ஊடாக சென்றுள்ளது.


அப்போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று நபர்கள் பேருந்துக்கு குறுக்காக மோட்டார்சைக்கிளை நிறுத்திவிட்டு சாரதியை சரமாரியாக தாக்கி விட்டு சென்றுள்ளனர்.

பருத்தித்துறை பேருந்து சாலை சாரதியே மேற்படி தாக்கப்பட்டுள்ளார். (ம-3.9)

# பாராட்டி வாழ்த்து

## திரு.நடராசா நித்தியானந்தன்

(அதிபர் - கிளி/செல்லியாதீவு அ.த.க. பாடசாலை)



**சேவைக்காலம்**

| | |
|---|---|
| 01.09.1992 - 31.08.1994 | கிளி/உருத்திரபுரம் ம.வி |
| 01.09.1994 - 30.04.1995 | கிளி/பூநகரி நல்லூர் ம.வி |
| 01.05.1995 - 31.10.1997 | கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை |
| 01.11.1997 - 30.04.1998 | கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம் |
| 01.05.1998 - 20.03.2001 | கிளி/கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை |
| 21.03.2001 - 16.01.2002 | கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 17.01.2002 - 02.09.2003 | கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம் |
| 03.09.2003 - 03.01.2016 | கிளி/சாமிப்புலம் அ.த.க.பாடசாலை |
| 04.01.2016 - 29.11.2019 வரை | கிளி/செல்லியாதீவு அ.த.க.பாடசாலை |

மணிவிழாக்காணும் திரு.நடராசா நித்தியானந்தன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் ஓய்வு காலம் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

(C-8381) **அதிபர் சங்கம் - கிளிநொச்சி மாவட்டம்.**

# புளியம்பொக்கணையில் விபத்து; ஒருவர் காயம்

(குருமபுரம்)

புளியம் பொக்கணையில் இடம்பெற்ற விபத்தில் மதவாச்சியைச் சேர்ந்த 32 வயதுடைய சமின் என்பவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பரந்தனில் இருந்து தர்மபுரம் நோக்கிச்சென்ற டிப்பர் வாகனமும் தர்மபுரத்திலிருந்து பரந்தன் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த நபர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிகப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைதத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தை தொடர்ந்து டிப்பர் வாகன சாரதி தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கபட்டுள்ளது. (ம-3,316)


## NEW MATHS COLLEGE

158, கன்னாதிட்டி யாழ்ப்பாணம் (Science Hall க்கு அருகாமையில்)

**புதிய கல்வியாண்டு - 2020**

தரம் 6-11

வரையிலான English Medium, தமிழ் மொழி மூலமான கணித பாட வகுப்புக்கள்.

**ஆரம்பம் : 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| தரம் – 6 | T.M / E.M மு.ப | 9.00 – 9.30 வரை |
| தரம் – 7,8 | T.M / E.M மு.ப. | 6.30 – 8.30 வரை |
| தரம் – 9,10,11 | T.M / E.M பி.ப. | 2.00 – 5.00 வரை |

(C-8383)

தொடர்பு - 0777071961 ஆசிரியர் - K.உமாகரன்


# மரண அறிவித்தல்

## கந்தசாமி நவராஜசிங்கம்

(ஓய்வு பெற்ற நீதிமன்ற பணியாளர்)



கோவிற்கடவை துன்னாலை மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நவராஜசிங்கம் கடந்த 26.11.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (உச்சிட்டார்) - வள்ளியம்மை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பரராஜசிங்கம், பராசக்தி, குணராஜசிங்கம், சிவராஜசிங்கம், பராநிதி, பத்மசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை, திருப்பதி, தர்மரத்தினம் மற்றும் தேவராணி, ரதி, ஜெயலட்சுமி, அமிர்தகுணம், ஜோன்செல்வராஜா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம் (சச்சி), ஸ்ரீகாந்தன் (காந்தன்) மற்றும் ஸ்ரீதனம், கலைவாணி, கலைமகள், கலைரூபன், செந்தில்ரூபன், கஜன், பிரசாந்தன், உருத்திரா, ஜெயத்திரா, ஆஷித்தா ஆகியோரின் ஆசை அப்பாவும், ரணா, மரியதாஸ், சத்தியமூர்த்தி, ரவிச்சந்திரன், தெச்சினி, நீரஜா, பிரதீபன், தர்சினி, பிரபாலினி, பிரதாபன், ஜீவந்தி, விஷயந்தி, பிரசாந்தி, சால்மூன், சலோமி, சீமூன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேறோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவட்டி. (1332)

077 757 0150
076 731 8796

தகவல் : **குடும்பத்தினர்**

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 06 - 1948

மறைவு 10 - 12 - 2014



## அமரர் சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி

(ராசாத்தி)

திதி : வளர்பிறை சதுர்த்தி

அன்பும் பண்பும் நிறைந்த எங்களது அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட இனிக்கும் நினைவுகளுடனே
ஐந்தாண்டும் ஆயிற்றோ நீவிர் எம்மை விட்டுப் பிரிந்து
'சொந்தபந்தங்கள் வாழ்வாதாராமாய் மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே! என்றும் உம்மை நினைத்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்!
பெற்றிடுக சாந்தி! ஓம் சாந்தி!!

கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (1331)

# இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு இந்தியாவின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்

## ஜனாதிபதியிடம் ஜெய்சங்கர் உறுதி

(டில்லி)

**இலங்கையில் புதிய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.**



இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முற்பகல் டில்லியில் சந்தித்தார்.

ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தொடர்ந்து இந்தியப் பிரதமரின் அழைப்பையேற்று தனது முதலாவது உத்தியோக பூர்வ விஜயமாக இந்தியாவிற்கு வருகை தந்தமை குறித்து இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அயல் நாடுகளான இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே காணப்படும் நீண்டகால நட்புறவு ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் ஊடாக மேலும் பலப்படுமென தான் நம்புவதாக குறிப்பிட்ட இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், இலங்கையில் புதிய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுமெனவும் தெரிவித்தார்.


பொருளாதார அபிவிருத்திகளை நோக்காகக் கொண்ட பரஸ்பர நன்மைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய புதிய அணுகுமுறையினூடாக இந்திய - இலங்கை தொடர்பினை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டுமென்பது பிரதமர் நரேந்திர மோடியின் எதிர்பார்ப்பாகுமென அமைச்சர் ஜெய்சங்கர் இதன் போது தெரிவித்தார். இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக ஒத்துழைப்புகள் தொடர்பாகவும் கருத்து தெரிவித்த இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், தரமான வர்த்தக கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்பட வேண்டியது அதற்கான அடிப்படை தேவையாகும் எனவும் இதனூடாக வெளிநாட்டு முதலீடுகளை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

இந்தியாவிற்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடியால் தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இரு நாடுகளுக்குமிடையிலான நட்பினை மேலும் பலப்படுத்த தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜெயசுந்தர, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க, திறைசேரியின் செயலாளர் எஸ். ஆட்டிகல, ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க, இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஒஸ்டின் பெர்னாண்டோ, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து மற்றும் இந்து சமுத்திர வலய ஒன்றிணைந்த செயலாளர் உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ-7)

# இந்திய - இலங்கை உறவினை உயர்மட்டத்திற்கு கொண்டுசெல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## இருநாட்டு ஜனாதிபதிகள் சந்திப்பில் இணக்கம்







(டில்லி)

இந்திய - இலங்கை உறவினை உயர்மட்டத்திற்கு கொண்டு செல்ல தமது பதவிக்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தியாவிற்கு இரண்டு நாள் அரசமுறை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்திற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முற்பகல் இடம் பெற்றபோதே ஜனாதிபதி கோட்டாபய இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் தனது முதலாவது அரசமுறை வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதியை வரவேற்கும் நிகழ்வு ராஸ்டிரபதி பவனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதன் போது இந்தியாவிற்கு வருகை தரும் வெளிநாட்டு அரச தலைவர்களுக்கு இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கோட்டாபயவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரு நாட்டு ஜனாதிபதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்த இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், இந்தச் சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவினைப் பலப்படுத்தும் முக்கியமானதொரு சந்திப்பாகும் எனத் தெரிவித்தார்.


புதிய இலக்குடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களைப் பாராட்டிய இந்திய ஜனாதிபதி இதற்கு தமது நாடு பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், இந்திய பொதுப் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி வீ.கே. சிங் மற்றும் இலங்கைத் தூதுக்குழுவினர் பங்குபற்றினர்.

அதனைத் தொடர்ந்து ராஜ்காட் (Raj Ghat) சென்ற ஜனாதிபதி மகாத்மா காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். (இ-7)

# தேசப்பிரிய தற்போது பதவி விலகுவது சிறப்பானதாக அமையாது-சபாநாயகர்

(கொழும்பு)



நாட்டில் எதிர்வரும் காலங்களில் தீர்க்கமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய பதவி விலகுவது சிறப்பானதாக அமையாது என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

அத்துடன் விசேடமாக கடந்த தேர்தல்களின் போது மகிந்த தேசப்பிரியவின் வழிகாட்டலின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழு மகத்தான சேவையை ஆற்றியிருந்தது.

எனவே எதிர்வரும் தேர்தர்களிலும் மகிந்த தேசப்பிரியவின் வழிகாட்டலின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சேவையை அத்தியாவசியமாகக் கருதுவதால் அவர் தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபயவிடம் தெரிவித்துள்ளதாக அறியக்கிடைத்திருக்கிறது.

இந் நிலையில் இவ்விடயம் தொடர்பில் சபாநாயகர் அலுவலகத்தால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# வார்னர், லபுசேன் சாதனை இணைப்பாட்டம்
# முதல் நாள் ஆட்டமுடிவில் ஆஸி முன்னிலை





பாகிஸ்தானுக்கு எதிரான பகலிரவு டெஸ்டில் வார்னர், லபுசேன் சதம் விளாச, முதல் நாளில் அவுஸ்திரேலிய அணி 302/1 ரன்கள் குவித்தது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா வென்றது. இரண்டாவது டெஸ்ட் பகலிரவு போட்டியாக பிரிஸ்பேனில் நேற்று ஆரம்பமானது. 'டாஸ்' வென்ற அவுஸ்திரேலிய அணி கப்டன் டிம் பெய்ன் பட்டிங் தேர்வு செய்தார்.

மழை காரணமாக சற்று தாமதமாக போட்டி ஆரம்பமானது. அவுஸ்திரேலிய அணிக்கு வார்னர், பர்ன்ஸ் ஜோடி தொடக்கம் கொடுத்தது. பர்ன்ஸ் 4 ரன்னில் ஷகீன் அப்ரிதி பந்தில் சிக்கினார். அடுத்து வார்னர், லபுசேன் இணைந்தனர். தேநீர் இடைவேளைக்குப் பின் மழை காரணமாக போட்டி 2:00 மணி நேரம் தாமதம் ஆனது.

மீண்டும் தொடர்ந்ததும், வார்னர், லபுசேன் கூட்டணி கடந்த டெஸ்ட் போல மீண்டும் மிரட்டியது. டெஸ்ட் அரங்கில் வார்னர் 23 வது, லபுசேன் 2 வது சதம் எட்டினர். இவர்களை பிரிக்க பாகிஸ்தான் கப்டன் அசார் அலி எடுத்த எந்த முயற்சிக்கும் கடைசி வரை பலன் கிடைக்கவே இல்லை.

முதல் நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 1 விக்கெட்டுக்கு 302 ரன்கள் எடுத்தது. இரண்டாவது விக்கெட்டுக்கு 294 ரன்கள் சேர்த்த வார்னர் (166), லபுசேன் (126) ஜோடி அவுட்டாகாமல் இருந்தது.

வார்னர், லபுசேன் இணைந்து பகலிரவு டெஸ்டில் எந்த ஒரு விக்கெட்டுக்கும் அதிக ரன்கள் (294 ரன், 2வது) சேர்த்த ஜோடி என்ற பெருமை பெற்றனர். இதற்கு முன் இங்கிலாந்தின் குக், ரூட் ஜோடி, தீவுகளிற்கு எதிராக 248 ரன்கள் (3வது விக்., பர்மிங்காம்) எடுத்ததே அதிகம்.





# பாகிஸ்தான் செல்லவுள்ள இலங்கை அணி அறிவிப்பு

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணிக் குழாமினை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற லாகூர் தாக்குதலின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியர்னது பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வது இது இரண்டாவது தடவையாக அமைந்துள்ளதுடன், அதன் பின்னர் அங்கு டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை இது முதலாவது சந்தர்ப்பமாகும்.

அதன்படி பாகிஸ்தானுக்கு அடுத்த மாதம் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியானது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் 2 போட்டிகள் கொண்ட சர்வதேச டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

முதலாவது போட்டி டிசம்பர் 11 தொடக்கம் 15 ஆம் திகதி வரை ராவல்பிண்டியிலும், இரண்டாவது போட்டி 19 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை கராச்சியிலும் இடம்பெறவுள்ளது.

இந் நிலையில் தொடரில் விளையாடும் திமுத் கருணாரத்ன தலைமையிலான 16



பேர் கொண்ட இலங்கை டெஸ்ட் அணிக் குழாமினை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் விளையாட்டுத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெருமவின் ஒப்புதலுடன் வெளியிட்டுள்ளது.

திமுத் கருணாரத்னவைத் தலைவராக கொண்ட இவ் அணியில் ஓசத பெர்ணான்டோ, குசல் மெண்டீஸ், அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், குசல் ஜனித் பெரேரா, லஹிரு திரிமன்ன, தனஞ்சய டிசில்வா, நிரோஷன் டிக்வெல்ல, தில்றூவான் பெரேரா, லசித் எம்புலுதெனிய, சுரங்க லக்மல், லஹிரு குமார, விஷ்வ பெர்ணா ன்டோ, கசூன் ராஜித, லக்ஷான் சந்தகான் ஆகிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

# இலங்கை தடகள அணித் தலைவி லியனாராச்சி விபத்தில் சிக்கி காயம்

13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை தடகள அணியின் தலைவியும் 800 மீற்றர் ஓட்டப் போட்டியின் தேசிய சம்பியனுமாகிய நிமாலி லியனாராச்சி விபத்தொன்றில் சிக்கி காயமடைந்துள்ளார்.

இவரது காயம் காரணமாக பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

நிமாலி லியானாராச்சி தனது மோட்டார் சைக்கிளில் காலையில் பயிற்சிக்காக பயணித்துக் கொண்டிருந்தபோதே விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து உடனடியாக தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் அவரது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நிமாலி லியனாராச்சி நடைபெறவுள்ள 13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் தடகள குழாத்துக்குத் தலைமை தாங்குகின்றமை விசேட அம்சமாகும்.

அத்தோடு குறித்த போட்டித் தொடரில் 800 மீ., 1500 மீ. மற்றும் 400 மீ. அஞ்சலோட்டப் போட்டிகளிலும் நிமாலி கலந்துகொள்விருந்தார்.

அதேவேளை கடந்த முறை நடைபெற்ற 12ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் நிமாலி தங்கப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நேபாளத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகாஜனா, ஹாட்லி மாணவர்கள் வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தல்



கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமான சேர் ஜோன் டாபட் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் வட பகுதி பாடசாலை மாணவர்கள் இருவருக்கு வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்துள்ளன. அத்துடன் கொஸ்கொட மாணவர் ஒருவர் புதிய சாதனை நிலைநாட்டினார்.

14 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளுக்கான உயரம் பாய்தல் போட்டியில் 1.42 மீற்றர் உயரம் பாய்ந்த தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் எஸ். சுவர்ணா வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

15 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகளுக்கான தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியைச் சேர்ந்த ஏ. சுகிஸ்டன் 39.80 மீற்றர் தூரத்தைப் பதிவுசெய்து வெள்ளிப்பதக்கம் வென்றார்.

போட்டியின் முதலாம் நாளான நேற்றைய தினம் 15 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகளுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கொஸ்கொட ஹேகல்ல மகா வித்தியாலய மாணவன் டி. டி சில்வா 1.86 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய போட்டி சாதனை நிலை நாட்டினார்.



# மீண்டும் சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய வீராங்கனை சானியா



குழந்தை வளர்ப்பில் கவனம் செலுத்திய சானியா ஜனவரி மாதம் அவுஸ்திரேலியாவில் நடக்கும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் மீண்டும் பங்கேற்க இருப்பதாக சானியா நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா, கிராண்ட்ஸ்லாம் இரட்டையர் பிரிவில் 6 பட்டங்களை வென்ற சாதனையாளர். பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொயிப் மாலிக்கை திருமணம் செய்து கொண்ட சானியா மிர்சா கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஆண் குழந்தையை பெற்றெடுத்தார். குழந்தை வளர்ப்பில் கவனம் செலுத்திய அதே வேளையில், உடற்தகுதியை மேம்படுத்துவதற்கான பயிற்சியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அவுஸ்திரேலியாவின் ஹோபர்ட் நகரில் நடக்கும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் மீண்டும் பங்கேற்க இருப்பதாக சானியா நேற்று முன்தினம் அறிவித்தார். கடைசியாக 2017-ம் ஆண்டு அக்டோபர் மாதம் விளையாடிய சானியா தனது மறுபிரவேசத்தில் இரட்டையர் ஜோடியாக உக்ரைனின் நாடியா கிசெனோக்கை தேர்வு செய்துள்ளார். அதைத் தொடர்ந்து நடக்கும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிசில் கலப்பு இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் ராஜீவ் ராமுடன் ஜோடி சேருகிறார். தான் தற்போது நல்ல உடற்தகுதியுடன் இருப்பதாக உணர்வதாகவும், இந்த போட்டிகளுக்கு முன்பாக மும்பையில் அடுத்த மாதம் நடக்கும் ஐ.டி.எப். போட்டியில் களம் காண திட்டமிட்டுள்ளதாகவும் 33 வயதான சானியா தெரிவித்தார்.

## பரிசில் நாள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காடு இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு இன்று 30.ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் கௌரி பரந்தாமன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் தர்மிகா மோகனராஜ், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிரான்சிஸ் சேவியர் அன்ரன், கௌரவ விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார், ஆசிரியர் பா.நேசரூபன், சாருஜா சிவசுதன் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-5-9)


## யாழ்ப்பாணம் மாநகர சபை

### உழவு இயந்திரங்கள், சிறியரக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல், தனியார் பாதுகாப்புச் சேவைகளுக்கான கேள்விகள் கோரல்

01) யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டார ஆதனங்களிலிருந்து வெளியேற்றப்படும் திண்மக்கழிவுகளினை வகை பிரித்து எடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு உழவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

02) யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டாரங்களின் கடைகள் சந்தைகளில் வெளியேற்றப்படும் பிளாஸ்ரிக் மற்றும் இறைச்சி எலும்புகளினை எடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சிறியரக வாகனம் தேவைப்படுகின்றது.

03) யாழ்ப்பாணம் மாநகர சபையின் தனியார் பாதுகாப்புச் சேவைக்கான இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விண்ணப்பதாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 16.12.2019 - 01.01.2020 ஆம் திகதிவரை சபையின் கொள்வனவுப் பகுதியுடன் தொடர்பு கொண்டு முதல் இரண்டு (01, 02) கேள்விகளுக்குரிய கூறுவிலைப்படிவங்களினையும், வேலைப்பகுதியுடன் தொடர்பு கொண்டு மூன்றாவது (03) கேள்விக்குரிய கூறுவிலைப் படிவங்களினையும் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 01.01.2020 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கேள்வி திறக்கும் திகதி: 02.01.2020 நேரம்:முற்பகல் 11.00 மணி.

ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம். C-8376


## பாதுகாப்புச் செயலருடன் ஐ.நா.விசேட குழு சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் கடத்தல் மற்றும் குற்றங்கள் ஒழிப்பு தொடர்பான அதிகாரிகளுக்கும் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன விற்கும் இடையில் கொழும்பில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது.

மிவாகாட்டோ என்ற அதிகாரியின் தலைமையில் நான்கு பேரைக் கொண்ட விசேட குழு இச்சந்திப்பில் பங்கேற்றது. இலங்கை அரசின் போதைப் பொருள் ஒழிப்புக்கான பயிற்சிகள் மற்றும் வலுவூட்டல் என்பன குறித்து இதன் போது ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஐக் கிய நாடுகளின் யூ.என்.ஓ.டி.சி அமைப்பு அங்கத்துவ நாடுகளுக்கு மத்தியில் பயிற்சிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் என்பவற்றை குறைப்பதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாகவே குறித்த சந்திப்பு இடம் பெற்றது. (இ-7)


## வகுப்பு

தரம் 6 கணிதம் (ஆங்கில மொழி மூலம்) 38, ராஜவீதி, நல்லூர்/ 19, நாயன்மார் வீதி நல்லூர்.

ஆரம்பம் 06.12.2019

தொடர்பு: 077 864 5971 (1319)



## தவறி விட்டது

பூநகரி பரந்தன் வீதியில் பூநகரி வாடியடிக்கும் தம்பிராய் சந்திக்கும் இடையில் முக்கிய ஆவணங்கள் தொலைபேசி, கிளினிக் கொப்பி, சமாதான நீதிவான் இறப்பர் முத்திரை இரண்டுடன் 27 ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு தோள் பை ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின் வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறியத்தரவும். உடன் நடவடிக்கை மேற்கொண்டு நேரில் ஒப்படைக்கலாம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 418 9656 (C-8380)

அ.ஐயம்பிள்ளை,
தவிசாளர், பிரதேச சபை, பூநகரி



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விளையாட்டு விருதுகள் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா 30.11.2019 (சனிக்கிழமை) அன்று பி.ப.4.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி வாழ்நாள் பேராசிரியர். கதிர்காமநாதன் கந்தசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2018 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களை அன்று பி.ப.3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கிற்கு தவறாது வருகை தருமாறு வேண்டிக்கொள்கிறோம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
C-8361



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-83777)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## இராசி பலன்

**மீனம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மேடம்:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், காரிய இடையூறுகள் ஏற்படலாம், உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**கும்பம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடி கைகூடும், போசன சுகமுண்டு.

**கடகம்:** உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மகரம்:** இறை வழிபாட்டுச் சிந்தனை உருவாகும், எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சிறப்பான நாள், பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கிரகநிலை: ராகு; சனி, கேது, சந், குரு, சுக்; சூரி; செவ், புத

சந்திராஷ்டமம்: மிருகசீரிடம்

30.11.2019
கார்த்திகை 14, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 8.24 மணி வரை
பூராடம் முற்பகல் 10.52 மணிவரை
சுபநேரம் 3.14-4.44 மணிவரை
இராகுகாலம் 9.14-10.44 மணிவரை
சதுர்த்தி விரதம்

வளவன்

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு நன்மை தரும், போசன சுகமுண்டு.

# யாழ். மாநகரசபைப் பகுதிகளில் விசேட சுகாதாரச் செயலணி களமிறக்கம்

## பலருக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைப் பகுதிகளில் விசேட சுகாதார வைத்திய அதிகாரிகளைக் கொண்ட செயலணி களமிறக்கப்பட்ட நிலையில் இவ்வாறம் பலருக்கு நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டது.


யாழ்.மாசகரசபைப் பகுதிகளில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நடவடிக்கையில் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் யாழ். மாநகர சுகாதாரப் பிரிவும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் நவம்பர் மாதப் பகுதியில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் இனங் காணப்பட்டனர்.

இதனையடுத்து டெங்குக் குடம்பிகள் உருவாகக் கூடிய பல பகுதிகளில் சுகாதாரப் பிரிவினர் கண்டு பிடித்தனர்.

எனவே பொதுமக்கள் மிக அவதானத்துடனும் பாதுகாப்புடனும் இருக்குமாறு சுகாதாரத் துறையினர் கேட்டுக் கொண்டனர். (இ-10)

# டெங்கு ஒழிப்பில் இராணுவம்





(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகமுள்ள உதயசூரியன் மற்றும் மகிழங்கேணிக் கிராமப் பகுதிகளில் 523வது படைப்பிரிவினர் நேற்று வெள்ளிக்கிழமை டெங்குக் கட்டுப்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது வீடு வீடாகச் சென்று பார்வையிட்டதுடன் டெங்கு பரவும் சூழலில் வசிக்கும் பொது மக்களுக்கு டெங்கு நோய் தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டன. சாவகச்சேரி-உதயசூரியன் மற்றும் மகிழங்கேணிக் கிராம மக்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி தற்காலிக கொட்டகைகள் அமைத்து வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

# ஆண்டு நிறைவு விழாவும் கலைக் கதம்ப விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மத்திய முன்பள்ளியின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மழலைகளின் கலைக் கதம்ப விழாவும் நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் மத்திய முன்பள்ளித் தலைவர் கா.சிவசோதி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், அச்சுவேலி எஸ்.பி.பினான்ஸ் முகாமையாளர் ஜெ.ஜெனநந்தன், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் ப.நாகேஸ்வரி, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியை திருமதி. கெ.சர்மிலா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வலி.கிழக்கு பிரதேசசபையின் கோப்பாய் உப அலுவலகத்தில் தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள ஓய்வுநிலை ஆரம்பக்கல்வி-உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.இராஜேஸ்வரன்.சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலக முன்னாள் பொறுப்பதிகாரி வா.கனகராசா,நீர்வேலி உப அலுவலக முன்னாள் பொறுப்பதிகாரி தி.தவராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# கலைஞர்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 71 ஆவது நிகழ்வு நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நல்லூரிலுள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் (199, கோவில் வீதி) நடைபெறும்.

இதில் இளம் ஓவியர்களான நிலானி ஜோசப், தவராசா தயேந்திரன் மற்றும் இளம் புகைப்படக் கலைஞரான தர்மபாலன் திலக்சன் ஆகிய கலைஞர்களுடனான கலந்துரையாடல் நடைபெறும். (இ-5-7)

# பவளவிழா

(யாழ்ப்பாணம்)

சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் தண்டபாணிக தேசிகர், ஸ்ரீமதி மகாவள்ளி அம்மா தம்பதியரின் பவளவிழா இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறும். (இ-5)




## தேவைகள், குறைபாடுகள் குறித்து

# நவீன சந்தை வியாபாரிகளுடன் முதல்வர் ஆனல்ட் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகத்தின் (வர்த்தக சங்கம்) அழைப்பின் பிரகாரம் யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்ட் யாழ். மாநகர நவீன சந்தைக்கு நேற்று முன்தினம் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

குறித்த விஜயத்தின் போது வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தேவைகள், குறைபாடுகள் தொடர்பில் வியாபாரிகளுடன் கலந்துரையாடினார்.

அண்மையில் மாநகர சபையில் முதல்வருக்கும் - யாழ் வணிகர் கழகத்திற்கும் (வர்த்தக சங்கத்திற்கும்) இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் தீர்மானத்திற்கமைவாக இவ் விஜயம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது வணிகர் கழகத் தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், மாநகர பொறியியலாளர்கள், மாநகர சந்தை மேற்பார்வையாளர்கள், வருமான வரிப் பரிசோதகர்கள், சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்கள், மாநகர உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினர் முதல்வருடன் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பரிசில் நாள்

(கொடிகாமம்)

குடமியன் அ.த.க பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக, தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி அ.மனோரஞ்சிதன், சிறப்பு விருந்தினராக குடமியன் கிராம உத்தியோகத்தர் அ.பிரதீபன், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி. பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-114)

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையத்தின் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணியளவில் மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் கருவி நிலையத்தின் செயலாளர் து.யசிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதி, பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர். திருமதி. வனஜா செல்வரட்ணம்.மக்கள் வங்கி உடுப்பிட்டிக் கிளையின் பிரதி முகாமையாளர் கி.கதிர்காமநாதன், கௌரவ விருந்தினர்களாக வலி. தென் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், யாழ்ப்பாணம் கிருபா சாரதிப் பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# ஆறு வர்த்தகர்களுக்கு ரூ.120,000 அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டங்களை மீறிய யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக வடமாகாண பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் முஹமட் சாவிக் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நீதிமன்றப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதியில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது 6 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதே குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. (இ-10)

# 'கனலி' மாணவர் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் 'கனலி' மாணவர் சஞ்சிகை வெளியீடு நாளை மறுதினம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ்.பல்கலைக்கழக நூலகம் கலையரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி.ரகுராம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி, சிரேஷ்ட பேராசிரியர் க.கந்தசாமி,சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி கே.சுதாகர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# பகிரங்க கேள்வி அறிவித்தல் - 2020

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2020.01.01-2020.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம் |
|---|---|
| திகதி:-<br>2019.12.02 ஆம் திகதி முதல் 2019.12.09 ஆம் திகதி வரை, அலுவலக நாட்களில் மட்டும். | திகதி:-<br>2019.12.10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை |
| நேரம்:- மு.ப. 9.00 - பி.ப. 2.00 வரை | நேரம்:- மு.ப. 10.00 மணி |
| இடம்:- கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம். | இடம்:- கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம். |

| இல | குத்தகை நிலையம் | கேள்விவைப்பு பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்வி படிவ கட்டணம் NBT நீங்கலாக மீளளிக்க முடியாதது | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | சேவைச் சந்தை -கிளிநொச்சி | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன் | 751,905.00 | 1,000.00 | 2,255,715.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 1,749,528.00 | 1,000.00 | 5,248,584.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம், வெற்றிலை, பாக்கு | 390,000.00 | 1,000.00 | 1,170,000.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 1,026,300.00 | 1,000.00 | 3,078,900.00 |
| 5 | கிளிநொச்சி தராசு கொட்டகை கருவாடு, முட்டை | 210,000.00 | 1,000.00 | 630,000.00 |
| 6 | கிளிநொச்சிசேவைச் சந்தை ஊர்க் கோழி விற்பனை நிலையம் | 13,200.00 | 1,000.00 | 39,600.00 |
| 6 | கிளிநொச்சி சேவைச் சந்தை வளாக பொது மலசலகூடம் | 54,688.50 | 1,000.00 | 164,065.50 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 1 | கரடிப்போக்கு சந்தியில் இருந்து இரணைமடுச் சந்திவரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 108,900.00 | 1,000.00 | 326,700.00 |
| | பொதுச்சந்தை-பரந்தன் | | | |
| 1 | பரந்தன் சந்தை | 24,324.30 | 1,000.00 | 72,972.90 |
| 2 | பரந்தன் ஆட்டிறைச்சிக்கடை | 24,057.00 | 1,000.00 | 72,171.00 |
| | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தை | 131,307.00 | 1,000.00 | 393,921.00 |
| 2 | வட்டக்கச்சி மாட்டிறைச்சிக்கடை | 152,567.70 | 1,000.00 | 457,703.10 |
| 3 | இராமநாதபுரம் ஆட்டிறைச்சிக்கடை | 17,714.70 | 1,000.00 | 53,144.10 |
| | பொதுச்சந்தை- இரணைமடு | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி | 21,870.00 | 1,000.00 | 65,610.00 |
| 2 | இரணைமடு மாட்டிறைச்சிக்கடை | 363,165.00 | 1,000.00 | 1,089,495.00 |
| 3 | இரணைமடு கோழி இறைச்சிக்கடை | 165,990.00 | 1,000.00 | 497,970.00 |
| | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | | |
| 1 | D10 உருத்திரபுரம் சந்தை தொகுதி | 10,935.00 | 1,000.00 | 32,805.00 |
| 2 | D10 உருத்திரபுரம் கோழியிறைச்சிக்கடை | 32,746.80 | 1,000.00 | 98,240.40 |
| | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை | 140,745.00 | 1,000.00 | 422,235.00 |
| | பொதுச்சந்தை தருமபுரம் | | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 38,806.44 | 1,000.00 | 116,419.33 |
| 2 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 152,031.00 | 1,000.00 | 456,093.00 |
| 3 | தருமபுரம் கோழி இறைச்சிக்கடை | 55,209.00 | 1,000.00 | 165,627.00 |
| | பொதுச்சந்தை- ஊற்றுப்புலம் | | | |
| 1 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | 75,900.00 | 1,000.00 | 227,700.00 |
| | பொதுச்சந்தை- ஆனைவிழுந்தான் | | | |
| 1 | ஆனைவிழுந்தான் மாட்டிறைச்சிக்கடை | 28,293.92 | 1,000.00 | 84,881.75 |
| | பொதுச்சந்தை- கண்டாவளை | | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 21,894.30 | 1,000.00 | 65,682.90 |
| | பொதுச்சந்தை முரசுமோட்டை | | | |
| 1 | முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | 38,734.20 | 1,000.00 | 116,202.60 |
| | பொதுச்சந்தை- அக்கராயன் | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 38,972.36 | 1,000.00 | 116,917.08 |
| | பொதுச்சந்தை- புன்னைநீராவி | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 50,544.00 | 1,000.00 | 151,632.00 |

நிபந்தனைகள்

1. விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளாதவர்கள் பகிரங்க ஏலத்துக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதுடன் கேள்விகாரரின் பிரதிநிதியாகக் கலந்து கொள்பவர்கள் விண்ணப்பகாரரால் அனுமதிக்கப்பட்ட கடிதத்தினை தம்வசம் வைத்திருத்தல் கட்டாயமானதாகும்.

2. ஊரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.

4. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

5. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விகாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்புத் தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகை ஒப்பந்தமாக மாற்றம் செய்யப்படும்.

6. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகை கட்டணங்கள் செலுத்தத்தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.

7. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருப்பதை அறிமுகச் சான்றிதழ் மற்றும் வதிவிட சான்றிதழை சமர்ப்பிப்பதன் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

8. கேள்விகாரர் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசித்தல் வேண்டும்.

9. கேள்வி கோரும் போது கட்டுப் பணத்தை குறித்தகால எல்லைக்குள் (அதிகபட்சம் ஒரு வார காலம்) செலுத்துவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

10. இறைச்சிக் கடைக்குரிய மாதாந்த இட வாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.

11. இறைச்சிக்கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

12. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அதேமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் கட்டத்தவறி பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப் பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப் பணத்துடன் 15% தண்டப் பணத்தையுமே சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

13. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக் கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச் செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

14. அனைத்து தராசுக் கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது தற்போது பாவனையிலுள்ளவாறு 3 வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.

15. கிளி.நகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தகமானிப் பத்திரிகையின் (அதிவிஷேசமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப் படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.

16. ஆரம்ப கேள்வித் தொகையை விட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

17. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை தவிசாளர் / செயலாளரினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைதாரர் கடைப்பிடிக்க வேண்டும்.

18. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ தவிசாளர் / செயலாளருக்கெதிராகவோ நீதிமன்ற நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாது.

தவிசாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

(c-8371)

# கடலை நம்பிவாழும் மக்களுக்கு பயனுள்ள வகையில் கடற்றொழில் செயற்பாடுகள் அமைய வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலை நம்பி வாழும் மக்களுக்கு பயனுள்ள வகையிலும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலும் எமது அமைச்சின் செயற்பாடுகள் அமையவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா மற்றும் அமைச்சின் செயலாளர் திருமதி ஆர். எம். இந்துரத்நாயக்கா ஆகியோர் தமது கடமைகளைப் பொறுப்பேற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மேலும், எமது நாட்டைச் சூழவும் கடல் வளம் இருக்கின்ற போதும், கடற்தொழில் மற்றும் அதனோடு ஒட்டிய இலாபம் ஈட்டும் தொழில் முயற்சிகள் போதுமான முன்னேற்றத்தை காணவில்லை. இந்த குறைபாட்டை நிவர்த்தி செய்து எமது நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லும் வேலைத் திட்டங்களை முன்னேடுக்க நாம் அனைவரும் ஒத்துழைப்போடும், அர்ப்பணிப்போடும் செயற்படுவது அவசியமாகும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா ஆகியோர் அதிகாரிகள் மத்தியில் வேண்டுகோள் விடுத்தனர். (இ-7)

# கஞ்சாவுடன் கைதானவர் மீண்டும் பணியில்

## முன்னணி உறுப்பினர்கள் வெளிநடப்பு
## தவிசாளர், ஆணையாளர் மீது குற்றச்சாட்டு
## கஞ்சா விற்பனைக்கு உடந்தையா எனவும் கேள்வி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் கோழி இறைச்சிக்கடைக்கு சீல் வைத்து மூட வேண்டும் என்ற சபைத் தீர்மானத்தில் உள்ளூராட்சி ஆணையாளரின் தலையீடு குறித்து சபை உறுப்பினர்கள் சிலர் கடும் எதிர்ப்பு வெளியிட்டதுடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் சபையை விட்டு இடைநடுவே வெளியேறிய சம்பவமும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரசபையின் விசேட அமர்வின் போது இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரி நகரசபையினர் குத்தகைக்கு வழங்கிய கோழி இறைச்சிக் கடையின் பணியாளர் ஒருவர் அண்மையில் கடமை நேரத்தில் மதுவரித் திணைக்களத்தினரால் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார். இருப்பினும் பிணையில் வெளிவந்த குறித்த பணியாளர் மீண்டும் கோழி இறைச்சிக் கடையில் பணியாற்றி வந்துள்ளார். குறித்த பணியாளரை நீக்குமாறு நகரசபை உத்தரவு பிறப்பித்தும் உரிமையாளர் அதனைச் செவிமடுக்கவில்லை. இந்நிலையில் சபை உறுப்பினர்கள் கூடி நகரசபையின் உத்தரவை மீறியமை மற்றும் கஞ்சா வைத்திருந்த பணியாளரை கடையில் வைத்திருந்த காரணங்களால் 14 நாட்களுக்கு கடைக்கு சீல் வைத்து மூடுவது என் தீர்மானம் ஒன்றினை நிறைவே ற்றியிருந்தனர். தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் மற்றும் தவிசாளர் இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்தனர்.

இதன்போது குத்தகைக்கு வழங்கப்பட்ட இறைச்சிக் கடைக்கு சீல் வைப்பதில் சட்ட சிக்கல் இருப்பதாக ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டது. இதனால் தவிசாளர் சீல் வைக்கும் முடிவினைக் கைவிட்டிருந்தார். இதனால் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட அமர்வின் போது சபை தீர்மானத்தில் உள்ளூராட்சி ஆணையாளரின் தலையீடு தொடர்பாக சபை உறுப்பினர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டனர்.

இது தொடர்பாக சபையின் முன்னணி உறுப்பினர் நிதிகேசன் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாப்ய ராஜபக்ஷ இலங்கையில் போதைப் பொருளை ஒழிக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டு வருகிறார் . ஆனால் சாவகச்சேரி நகரசபையோ போதைப்பொருள் விற்பனை தொடர்பில் கண்டும் காணாமல் இருந்து வருவது வருத்தமளிக்கிறது. பயனுள்ள சபைத் தீர்மானங்கள் தொடர்ந்தும் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்படுகின்றன. சபைத் தீர்மானத்தை உள்ளூராட்சி ஆணையாளருடன் கலந்தாலோசிக்க வேண்டிய தேவையில்லை. சபையின் தீர்மானத்தில் உள்ளூராட்சி ஆணையாளர் தலையிட்டு நிறுத்துவதானால் இந்த சபை எதற்கு?


அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். சபையின் தீர்மானத்தில் தலையிட உள்ளூராட்சி ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளதா?

தவிசாளரும் உள்ளூராட்சி ஆணையாளரும் கஞ்சா விற்பனைக்கு உடந்தையா?

சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு சரியான தீர்வு கிடைக்காமல் சபையை நடத்த அனுமதிக்க மாட்டோம். என மேலும் அவர் தெரிவித்தார். அத்துடன் சபையிலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களான நிதிகேசன், நடனதேவன், உதயசந்தர், பிரகாஷ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் வெளியேறி எதிர்ப்பை வெளியிட்டனர். சாவகச்சேரி நகரசபையினரால் ஒரு வருட கால குத்தகைக்கு விடப்பட்ட கோழி இறைச்சிக் கடையின் ஒப்பந்த காலம் எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதியு டன் நிறை வுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# டெங்கு ஒழிப்பு தீவிரம்






(யாழ்ப்பாணம்)

நகரை சுத்தமாக வைத்திருப்போம் என்ற ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் நெல்லியடி பொலிஸார், வடமராட்சிப்பகுதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை நேற்றுக்காலை முன்னெடுத்தனர்.

இவ் வேலைத்திட்டத்தில் யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், கிராம உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், தாதியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-7-60)

# றிசாத், ஹக்கீம், ராஜித உள்ளிட்டவர்களை உடனடியாக கைது செய்யுமாறு கோரிக்கை







(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களான றிசாத் பதியூதீன், ரவூப் ஹக்கீம், ராஜித சேனாரட்ன, ஹிஸ்புல்லா உள்ளிட்டவர்களை உடனடியாக கைது செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

ராவணா பலய அமைப்பின் இணைப்பாளரான இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பாளரான ஷாணி அபேசேகரவையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதுகுறித்து கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், 'கடந்த காலங்களில் றிஷாத், ஹக்கீம், ஹிஸ்புல்லா உள்ளிட்டவர்கள் இனவாதிகளாகவே செயற்பட்டார்கள். கிழக்கு மாகாணத்தை இந்த நாட்டின் வேறு ஒரு பகுதியாக இயக்கப் பார்த்தார்கள்.

இயற்கை மரங்களை அழித்துவிட்டு சவுதி அரேபிய மரங்களை இங்கே நட்டார்கள். இவர்கள் கடுமையாக இனவாதத்தை விதைத்து வந்தனர். அதேபோன்று திருடர்கள் நாட்டிலிருந்து தப்பிச் செல்லும் வழிகளை தடுக்க வேண்டும்.

றிஷாத் போன்றவர்கள் புறம்பான திருடர்கள். அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. அதேவேளை நிஷாந்த டி சில்வா போன்றவர்கள் இன்று நாட்டிலிருந்து தப்பிச்செல்லும் நிலை உள்ளது. அவருக்கு உதவி செய்தவர்கள் இருக்கின்றனர்.

அதேபோன்று இரகசிய பொலிஸார் இந்த நாட்டிற்காகவா? அல்லது வெளிநாடுகளுக்காகவா? பணிபுரிந்திருக்கிறார்கள் என்கிற சந்தேகம் நிலவுகிறது.

அதன் முன்னாள் பொறுப்பதிகாரி ஷாணி அபேசேகரவை கைது செய்தால் பல இரகசிய தகவல்களையும் அம்பலப்படுத்த முடியும் என நம்புகிறோம்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சகல இரகசியத் தகவல்களுக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சில அதிகாரிகளே பொறுப்புக்கூற வேண்டும்' எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:பூராடம் 1<br>கி.பா:16 ½செவ் 2 ல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:B.ScReal Estate & Mini mart - UK<br>எதிர்பார்ப்பு:A/L, பட்டதாரி, ஆங்கில தகைமை, உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/2805 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 4<br>கி.பா: 48 ¼செவ் 2 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/5086 |
| பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 3<br>கி.பா: 12 ¾<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்: BSMS, Msc, ஆயுர்வேத வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம். அசைவமும் புரிந்துணர்வுடன் ஏற்கப்படும்<br>தொ.இ: B/2820 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 2<br>கி.பா: 24 உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/5089 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 29 ½<br>தகைமை/தொழில்:B:Sc, M.Sc, Bank UK<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/2826 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 1<br>கி.பா: 42 ½செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5093 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:பரணி 3<br>கி.பா: 13 ½செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: A/L படித்தபெண். சைவ போசனம்<br>தொ.இ: B/2829 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்:பூரம் 1<br>கி.பா: 50<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/5094 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இறப்பு
2018 - 11 - 30

பிறப்பு
1945 - 11 - 03

## சின்னப்பு யோசவ் செல்வநாயகம்





விதையாய் கிடந்ததை
உம்மைச் செதுக்கி
விருட்ஷமாக்கினீர்!

நல்ல நாணயத்தினால்
நாணயம் சேர்த்தீர்!

நற்குடியினை ஆக்கும்
நற் தொழில் தந்தீர்!

கல்விச் சமூகமொன்றினை
உமது உறவாக்கினீர்!

அத்தனை துன்பங்களையும்
நகைச்சுவைக்குள் மறைந்தீர்!

நீங்கள் சிந்திய
வியர்வைத் துளிகள்
எமது வீடுகளில்
விளக்காய் எரிகிறது!

எங்களது ஒவ்வொரு
புன்னகையிலும்
உங்களது தியாகம் தெரிகிறது!

நேர்மையாய் உண்மையாய்
நல் மனிதர்களாய் நலம் வாழ
வழிதந்தீர்!

எம்முயர்வுகள் ஒவ்வொன்றிலும்
உங்களது உயிர் நிலையாகி
வாழும்!

ஆசீர் வணிக நிலையம்
2022, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள்
யோ.செ.அலென்ஸ் நின்சன், கி.சே.அனிற்ராசுபோஜினி
யோ.செ.ரஜீவ் (London)

(1328)

# வவுனியா பிரதேச கலாசார விழா







(குருமன்காடு)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வவுனியா பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த இக் கலாசார விழாவானது நேற்று முன்தினம் வவுனியா குடியிருப்பு பிரதேச கலாசார மண்டபத்தில் பிரதேச செயலாளர் கா.உதயராஜா தலைமையில் இடம்பெற்றது.


வவுனியாவில் கலை, கலாசார பண்பாடுகளை வெளிப்படுத்தும் பாரம்பரிய கலைகள் மற்றும் பிரதேச கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தும் நாட்டிய, நாடக, நடன நிகழ்வுகளும் இதன் போது இடம்பெற்றது.

அத்துடன், துறைசார் கலைஞர் கௌரவிப்பும் "வவுனியம்-3" நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெற்றது. மேலும், இலக்கிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராஜ குகனேஸ்வரன், வவுனியாவளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சுஜீவா சிவதாஸ், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மாலினி கிருஷ்ணானந்தன் மற்றும் துறை சார் கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும்கலந்து கொண்டனர். (9-250)




# மாஞ்சோலை பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது



(பனிககனகுளம்)


முள்ளியவளை மாஞ்சோலை பகுதியில் கஞ்சா வியாபாரம் இடம் பெற்று வருவதாக முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.அண்வர்தீன் தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அந்த வகையில் நேற்றுக் காலை 3 ஆம் கட்டைப்பகுதியில் பேருந்தில் வந்திறங்கிய ஆழியவளையைச் சேர்ந்த பெண் உள்ளிட்ட இருவர் ஒரு கிலோ கேரளக் கஞ்சாவினை நான்கு பொதிகளில் வியாபாரததிறகாகக கொணடு வந்துள்ளார்கள்.

சந்தேகத்தின் பேரில் இவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது கஞ்சாவை விற்பனைக்காகக் கொண்டு வந்தமை தெரிய வந்துள்ளது.

அதனடிப்படையில் வடம்ராட்சி கிழக்கு ஆழியவளையை சேர்ந்த 28 வயதுடைய பெண் ஒருவரும் 39 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்களை பொலிஸார் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தனர். (9-281)

# பூநகரியில் விபத்து; நால்வர் காயம்



(முறிகண்டி)

பூநகரி செல்விபுரம் வீதி வளைவில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட விபத்தில் வாகனத்தில் பயணித்த நான்கு பேர் காயம்டைந்துள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப்ரக வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரத்தில் இருந்த மரமொன்றுடன் மோதியுள்ளது.

குறித்த வாகனத்தில் நால்வர் பயணித்த நிலையில் முன் இருக்கையில் அமர்ந்து பயணித்த சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர். பின்னால் இருந்த இருவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் மற்றைய நபர் பூநகரி வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (9-100)

# மணிவிழா

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம் நடத்தும் செல்லியாதீவு அ.த.க.பாடசாலையின் ஓய்வுபெறும் அதிபர் நடராசா நித்தியானந்த னின் மணி விழா நிகழ்வு இன்று 30 ஆம் திகதி முற்பகல் 10 மணி யளவில் பூநகரி நல்லூர் ம.வி. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் கிளிநொச்சி வலய அலுவலர்கள்,மாவட்ட அதிபர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (9-84)

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை பட்ஜெட் நிறைவேற்றம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்திற்கான விசேட அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் செ.பிறேமகாந் தலைமையில் நடைபெற்றது.

2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டமானது சபையில் விவாதிக்கப்பட்டு பின்னர் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பின்போது 15 உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கு மக்களின் வரவு-செலவுத்திட்டமாக இது அமைந்துள்ளது என தெரிவித்த தவிசாளர் செ.பிறேமகாந் மக்களின் அபிவிருத்திக்காகவும் மக்கள் பிரதிநிதிகளாக பிரதேச சபை உறுப்பினர்களின் கோரிக்கையையும் வைத்து இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.இது மக்கள் பாவனைக்காக எதிர்வரும் 12.12.19 வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு, முறிகண்டி, ஆகிய உப அலுவலகங்களிலும் மக்கள் பாவனைக்காக வைக்கப்படும் என தெரிவித்தார். (9-281)

# உணவு தன்னாதிக்கத்தை பாதுகாப்பது தொடர்பில் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு



(மன்னார்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் உணவு தன்னாதிக்கத்தை பாதுகாப்பது தொடர்பில் இளைஞர்களுக்கு தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு செயலமர்வு நேற்று வெள்ளிக் கிழமை மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தேசிய மீன்வ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிற் குரூஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த செயலமர்வில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் செயற்பாட்டாளர் மேரி பிரியங்கா கலந்து கொண்டதுடன், உணவு தன்னாதிக்கத்தை பாதுகாப்பது தொடர்பில் விரிவுரைகளை விவசாய வளவாளர் பிரின்டன் ஜோட் நிகழ்த்தினார்.

இலங்கையில் நச்சுப் பதார்த்தங்களை அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றமையினால் உணவுப் பொருட்கள் நச்சுத் தன்மையை அடைந்து வருகின்றன.

இந்த நிலையில் நச்சுத் தன்மையினை தவிர்க்கும் வகையில் உணவு தன்னாதிக்கத்தை பாதுகாப்பது தொடர்பாகவும் நச்சுத் தன்மை இன்றி இயற்கையான முறையில் விவசாயம் மற்றும் தோட்டச் செய்கைகளை கையாளும் முறை தொடர்பாகவும் நோய் ஏற்படும் சந்தர்ப்பத்தை தவிர்த்துக் கொள்ளும் வழி முறைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப் பட்டது. (9-285)





மன்னார் ஈச்சளவக்கை அரசின்ர் தமிழ் கலவன் பாடசாலையில் முகமது நபிகள் பிறந்ததின மீலாத் விழா நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் ஜே.கே.பயஸ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மன்.பெரியமடு ஆரம்ப பாடசாலை அதிபர் ஹன்பர், ஈச்சளவக்கை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு பன்னீர் செல்வம் சர்மா, சன்னார் ஜும்மா பள்ளிவாசல் மௌவி நிஹார், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-பெரியமடு செய்தியாளர்)

# வவு.மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவராக தர்மபால தெரிவு

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவராக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரும் பொதுஜன பெரமுனவின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தருமான தர்மபால செனவிரட்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் போல கட்சி சார்ந்து செயற்படாது, மக்களுக்காக கட்சி சார்பில்லாமல் பணியாற்றுவேன். தற்போது வீதி, வீட்டுத்திட்டம் போன்ற பல்வேறு தேவைகள் மக்களுக்கு இருக்கின்றன. அதனை சீர் செய்வதற்காக மக்களுடன் இணைந்து செயலாற்றுவதற்கு நான் என்றும் தயாராக இருக்கிறேன். அனைத்து மக்களும் என்னை சந்திக்க முடியும். அதன்மூலம் வவுனியா மாவட்டத்தினை அபிவிருத்திப் பாதையில் முன்கொண்டு செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-299)

# மன்னாரில் டெங்கு தீவிரம்
## விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தல்

(மன்னார்)

காய்ச்சல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அரச வைத்தியசாலைகளில் அல்லது தகுதி வாய்ந்த வைத்திய அதிகாரி ஒருவரிடம் மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு அபாயம் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை நேற்று முன்தினம் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. குறித்த துண்டுப் பிரசுரத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

கிராமங்களில் டெங்கு குருதிப் பெருக்கு நோய் மீண்டும் தீவிரமாக பரவி வருகின்றது. எனவே உங்கள் வீடுகள், நிறுவனங்கள், பொது இடங்களில் டெங்கு நுளம்பு பெருகும் மிக முக்கியமான இடங்களான நீர் சேமித்து வைக்கும் தொட்டி, மலசலகூட பாவனைக்கு நீர் சேமித்து வைக்கும் தொட்டி அல்லது வாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதனுடன் சேர்த்து வீட்டில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களான தயிர்ச்சட்டிகள், யோக்கட் கப், சிரட்டைகள், இளநீர், கோம் பைகள், மூடியில்லா போத்தல்கள், சொப்பின் பைகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், ரெஜிபோம் பெட்டிகள், டயர்கள், தகரப்பேணிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனவே குறித்த பொருட்களை அகற்றியும்,குளிர்சாதனப் பெட்டியின் பின் பகுதியில் நீர் தேங்கும் தட்டையும்,ஏ.சி யின் நீர் தேங்கும் தட்டையும் வாரத்திற்கு இருமுறை நீரை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும். மேலும் நீர் சேகரிக்கும் பாத்திரம் மற்றும் நில மட்டத்திற்கு கீழ் உள்ள நீர்த்தாங்கிகளில் நுளம்பு உள்ளே செல்லாத வகையில் மூடியினால் மூடி வைக்க வேண்டும்.

மேலும் அகற்ற முடியாத நீர் தேங்கும் பகுதிகளில் கப்பீஸ் போன்ற மீன்களை வளர்ப்பதன் மூலம் டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த முடியும். பாவனை அற்ற நீர்த் தொட்டிகளை இடித்து அல்லது அப்புறப்படுத்தியும் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை இல்லாமல் செய்து டெங்கு குருதிப் பெருக்கு நோயில் இருந்து உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் சமூகத்தினரையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாக காணப்படும் நேரங்களான காலையிலும், மாலையிலும் 5 மணி முதல் 8 மணி வரையுமான காலப்பகுதியில் நுளம்பு கடித்தலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். காய்ச்சல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அரச வைத்தியசாலைகளில் அல்லது தகுதி வாய்ந்த வைத்திய அதிகாரி ஒருவரிடம் மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும்.

வைத்திய ஆலோசனைகளை புறக்கணிக்க வேண்டாம் என்பதுடன் காய்ச்சல் காலங்களில் வலிநிவாரண மாத்திரைகள், அஸ்பிரின் போன்ற மாத்திரைகளை உபயோகிக்க வேண்டாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (9)

# வன்னேரிக்குள நீர் வெளியேற்றம்!
## அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விஜயம்



(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தின் தென் பகுதி ஊடாக நீர் வெளியேறும் பகுதியினை கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர் த.இராஜகோபு உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளாக வன்னேரிக் குளத்தின் தென் பகுதி ஊடாக குளத்தின் நீர் வெளியேறுவதன் காரணமாக நெற்செய்கை பாதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்வதில் நெருக்கடிகளை விவசாயிகள் எதிர்கொண்டிருந்தனர்.

ஆண்டுதோறும் வெளியேறும் நீரினைத் தடுப்பதற்கு 1,500 வரையான மண் மூடைகளை அடுக்கி நீர் வெளியேறுவதைத் தடுத்து இருந்தனர். தற்போது கூட வெளியேறும் நீரினைத் தடுப்பதற்கு 3,000 வரையான மண் மூடைகள் அடுக்கியும் நீரினைத் தடுக்கும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

நீர் வெளியேறும் பகுதிக்குச் சென்ற பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தற்போது நீர் வெளியேறுவதை வழமை போன்று தடுக்குமாறும் அடுத்த ஆண்டில் நிரந்தரக் கட்டுமானம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் விவசாயிகளிடம் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் இப்பகுதியில் நிரந்தரக் கட்டுமானம் ஒன்றினை அமைப்பதற்கு ஒரு மில்லியன் ரூபா நிதிமதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-350)




# சட்டவிரோதமாக மாட்டை வெட்டி இறைச்சி ஆக்கிய மூவர் கைது



(நெளுக்குளம்)

வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் வீடு ஒன்றில் நேற்று மாட்டை வெட்டி இறைச்சியாக்கி அதனை விற்பனை செய்வதற்கு முயன்றபோது சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர்கள் மூவரை கைது செய்துள்ளதாக வவுனியா பிராந்திய போதை ஒழிப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மதீனாநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மாடுகள் அறுத்து விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் பொலிஸார் அப்பகுதியைச் சுற்றிவளைத்து திடீர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

அப்போது சட்டவிரோதமான முறையில் மாடு அறுத்த சந்தேக நபர்கள் மூவருடன் 82.750 கிலோ கிராம் இறைச்சியையும், இறைச்சி வெட்டுவதற்கு தயாராக இருந்த மாடு ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மாடுகள் அறுத்து விற்பனை செய்யப்பட்டு வருவதும் தற்போது பொலிஸாருக்கு தெரிய வந்துள்ளது.

குறித்த கைது நடவடிக்கை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் திஸ்சலாலசில்வாவின் வழிகாட்டலில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலதிலகவின் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இதையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கைப்பற்றப்பட்ட இறைச்சியையும் சந்தேக நபர்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (9-299)

# போக்குவரத்து பாதுகாப்புக் கூட்டம்



(குருமன்காடு)

வவுனியாவில் வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பான கூட்டம் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் அமைந்துள்ள சேவை பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸலாத சில்வா தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.பி.மல்வலகே மற்றும் வவுனியா மாவட்டத்திலிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரிகள், போக்குவரத்துப் பொலிஸார், அரச திணைக் கள உயர் அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், சுகாதாரப் பிரிவினர், வீதி அதிகார சபையினர், பாடசாலை சமூகத்தினர், முச்சக்கரவண்டி சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் டெங்கின் தாக்கம் மற்றும் அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள், கடந்த சில மாதங்களில் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட போக்குவரத்து மாற்றங்கள், வீதி விபத்தினை கட்டுப்படுத்த செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள், பொலிஸாரின் செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (9-250)



பரந்தன். குமரபுரம் பகுதியில் அமைந்துள்ள சுப்பிரமணியம் இராசம்மா மணிமண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற மாபெரும் கலை நிகழ்வில் ஒரு நிகழ்வாக சொற்பொழிவாளரும் வவுனியா தமிழ்ச்சங்கத்தின் தலைவருமான தமிழருவி சிவகுமார் கௌரவிக்கப்பட்டார்.
(படம்:- முரசுமோட்டை செய்தியாளர்.)

# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு



(குருமன்காடு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நகர அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு அமைய வவுனியா பொலிஸாரினால் பல்வேறு செயற்றிடங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வவுனியா கண்டி வீதி மூன்றுமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் வவுனியா பொலிஸாரினால் நேற்று முன்தினம் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் பொலிஸாரினால் மாணவர்களுக்கு விழிப்புணர்வு கலந்துரையாடலொன்று இடம்பெற்றதுடன் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை வளாகத்தினை டெங்கு அற்ற பகுதியாக மாற்றும் செயற்றிட்டத்தில் தொழிற்பயிற்சி கல்லூரி மாணவர்களுடன் இணைந்து பொலிஸாரும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (9-250)

# முல்லை.மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவராக கனகரத்தினம் நியமனம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினருமான ச.கனகரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர்களாகவும் பலர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-281)

# பாரதம்

## கீழடி அகழ்வாராய்ச்சிப் பணிக்கு அமெரிக்காவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

(சென்னை)

கீழடி 6 ஆவது கட்ட அகழ்வாராய்ச்சிப் பணியில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகம் இணைந்து செயற்படவுள்ளதாகவும் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக உள்ளதாகவும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் கிருஷ்ணன் தெரிவித்தார்.

இது குறித்து அவர், நேற்று வெள்ளிக்கிழமை மதுரை விமான நிலையத்தில் அளித்த பேட்டியில், "கீழடி அடுத்தகட்ட ஆய்வை தொடங்கும் தருணம் நெருங்கி வருகிறது. அதற்காக சென்னையில் சிரேஷ்ட பேராசிரியர் பிச்சை அப்பன் மற்றும் தலைமைச் செயலாளர் உதயசந்திரன் ஆகியோரை சந்தித்து கீழடியில் 6ஆம் கட்ட ஆய்வை உடனடியாக தொடங்க வேண்டும் என நாம் வலியுறுத்தினோம்.

மேலும், கீழடி 6 ஆம் கட்ட அகழ்வாராய்ச்சியில் மாநில தொல்லியல் துறையுடன் இணைந்து ஆய்வு செய்வதற்காக தமிழ்நாடு அரசுடன் ஒரு மாத காலத்தினுள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடவுள்ளோம்.

அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், கீழடி அகழ்வாராய்ச்சியில் கிடைத்த சில பொருட்களை ஆய்வு செய்வதற்காக அமெரிக்கா எடுத்துச் சென்றுள்ளது.

இதன் மூலம் கீழடியின் தொன்மை, நாகரிகம், கலாசாரம் குறித்த ஹார்வார்டு பல்கலையின் முடிவுகள் வெகு விரைவாக அறிவிக்கப்படும்" என குறிப்பிட்டார். (ஜ-2)

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்

## 45 பேர் உயிரிழப்பு! 50 பொ




(பக்தாத்)

ஈராக்கின் தென் நகரான நஸிரியஹ் ஹில் பாதுகாப்பு படையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற உக்கிர மோதலின் போது 35 ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதோடு, தாக்குதலில் 10 பேர் உயிரிழந்த நிலையில் 50 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலியானவர்கள் தொகை மென் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊழல் மிக்கதும் திறன்ற்றது மான அந்நாட்டு ஆட்சி முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் இரு மாதங்களாக தென் ஈராக்கிலும் அந் நாட் டின் தலைநகர் பக்தாத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனையடுத்து நஸிரியஹ் பிராந்தியத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளது. (ஜ-2)

## தூத்துக்குடியில் புதிய ஏவுதளம்

(சென்னை)

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் ரொக்கெட் ஏவுதளம் அமைக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்தது.

விண்வெளி ஆராய்ச்சிகள் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ஜிதேந்திர சிங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் ஏற்கனவே ஒரு ரொக்கெட் ஏவுதளம் உள்ள நிலையில் அடுத்தபடியாக தமிழகத்தின் குலசேகரன்பட்டினத்தில் ரொக்கெட் ஏவுதளம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## வடகொரியா மீண்டும் ஏவுகன

### தென்கொரிய இராணுவம் தகவல்

(பியாங்யாங்)

வடகொரியா இரண்டு ஏவுகணைகளை மீண்டும் சோதனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இவ்வாறு சோதனை செய்துள்ளதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்தது.

கடந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் வடகொரியா முதலாவது ஏவுகணை பரிசோதனை செய்துள்ளதாக தென்கொரியா குறிப் பிட்டது.

இதேவேளை, ஏவுகணை என நம்பப்படும் பொருள் ஒன்று தமது ரேடார் அமைப்பில் கண் காணிக்கப்பட்டதாக ஜப்பான் குறிப்பிட்டது. எனினும் அது தமது வான் பரப்புக்குள் அல்லது விசேட பொருளாதார வலயத்துக்குள் உள்நுழையவில்லை என ஜப்பான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கருணைக்கொலை செய்யக்கோரி பிரதமருக்கு நளினி கடிதம்



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்துவரும் நளினி, தன்னை கருணைக்கொலை செய்யுமாறு கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை எழுதி அனுப்பியதாக தகவல் வெளியாகியது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகன், வேலூர் ஆண்கள் சிறையிலும் அவரது மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நளினி தன்னை விடுதலை செய்யக்கோரி தொடர் உண்ணாவிரதத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் ஆரம்பித்தார்.

இதற்காக கடந்த புதன்கிழமை சிறை அதிகாரிகளிடம் மனு கையளித்தார்.

இதற்கிடையே 28 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாழ்ந்து விட்டதாகவும் பல ஆண்டுகள் விடுதலைக்காக போராடியும் விடுதலை கிடைக்கவில்லை என்பதால் வாழ்க்கையில் விரக்தி அடைந்த நளினி தன்னை கருணைக்கொலை செய்யக்கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியதாகவும் தகவல் வெளியாகியது.


இதேவேளை கருணைக் கொலை செய்யக்கோரித்தான் அவர் மனு அளித்துள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மனு குறித்து, நளினியின் சட்டத்தரணி புகழேந்தியை தொடர்பு கொண்டு கேட்டபோது, "இந்த தகவல் எனக்கும் வந்துள்ளது.

ஆனால் உண்மையா? என தெரியவில்லை. இதுபற்றி சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்க மறுக்கின்றனர். ஓரிரு நாட்களில் நளினியை சந்திக்க உள்ளேன்" என்றார்.

அவ்வாறாயின் சட்டத்தரணி புகழேந்தி சிறைக்கு சென்று, நளினியை சந்தித்து பேசிய பின்னர்தான் முழுமையான தகவல் வெளியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## வெடித்துச் சிதறியது எரிமலை



(மெக்சிகோ சிட்டி)

மெக்சிகோவிலுள்ள போபோகாட்பெடல் எரிமலை வெடித்துச் சிதற ஆரம்பித்தது.

மெக்சிகோவின் இரண்டாவது உயரமான எரிமலையான போபோகாட்பெடல், 5 ஆயிரத்து 426 மீற்றர் உயரம் கொண்டது. இந்த நிலையில் குறித்த எரிமலையில் இருந்து, லாவாக்குழம்புகள் வெளியேறி வருகிறது.

மலைகளின் இடையே எரிமலை வெடித்துச் சிதறியதில் தீப் பிழம்புகள் வெளியேறி, விண்ணை தொடுமளவுக்கு சாம்பல் நிற புகை மண்டலமாக காட்சியளித்தது. (ஜ-2)




# ...துப்பாக்கிப் பிரயோகம்
# ...பொலிஸார் படுகாயம்


...டம் அமுல்





...து மான
...த எதிர்
...மாதங்
...ாட் டின்
...ர்ப்பாட்
...ன்றன.
...ிராந்தி
...ப்பிக்கப்
(ஜ-2)

# ...ுகணை பரிசோதனை



...ிட்டது.
...ப்படும்
...மைப்பில்
... குறிப்
... பரப்புக்
... வலயத்
...ஜப்பான்
...(ஜ-2)

# ...லை



... இந்த
...இருந்து.
...கிறது.
...ல வெடி
...ியேறி.
...பல் நிற
... (ஜ-2)

# கனடாவில் சிறியரக விமானம் விபத்து மூன்று சிறுவர்கள் உட்பட ஏழு பேர் பலி



(ஒட்டாவா)

கனடாவில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் மூன்று சிறுவர்கள் உள்ளிட்ட ஏழு பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட சிறிய ரக விமானம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

விபத்துக்கான காரணம் இது வரையில் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் இதுகுறித்த விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஜ-2)

# தலிபான் போராளிகள் யுத்த நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவிப்பர் - ட்ரம்ப் நம்பிக்கை

(காபூல்)

தலிபான் போராளிகள் யுத்த நிறுத்தத்துக்கு இணக்கம் தெரிவிப்பார்கள் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க துருப்பினரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்திருந்தார்.



இதன் போதே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் ஆப்கானிஸ்தானுக்கு மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவென குறிப்பிடப்படுகின்றது.

தலிபான்கள் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள விரும்புவதாகவும் தமது தரப்பினர் அவர்களை சந்திக்க தயாராக இருப்பதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை

(மாலே)

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு 5 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நிதி மோசடி குற்றச்சாட்டு தொடர்பாக அந்நாட்டு நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணையின் போது முன்



னாள் ஜனாதிபதி குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்தவகையில் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக 5 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது. (ஜ-2)

# ஆப்கானில் இரட்டைக்குண்டுத் தாக்குதல்; சிறுவர்கள், பெண்கள் உட்பட 16 பேர் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட இரண்டு குண்டுத் தாக்குதல்களில் 16 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானின் குண்டூஸ் மாகாணத்தின் வடகிழக்கில் வைக்கப்பட்டிருந்த இரண்டு குண்டுகளே கடந்த புதன்கிழமை மாலை இவ்வாறு அடுத்தடுத்து வெடித்தன. இதன்போது ஆறு பெண்கள், ஆறு சிறுவர்கள் உள்ளிட்ட 16 பேர் உயிரிழந்தனர்.

தலிபான் பயங்கரவாதிகளினால் இந்த குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்



எனச் சந்தேகம் வெளியிடப்பட்டது. (ஜ-2)

# பருவநிலை மாற்றத்தின் உச்சப் புள்ளியை பூமி ஏற்கனவே தொட்டு விட்டதாக எச்சரிக்கை

(லண்டன்)


பருவநிலை மாற்றத்தின் உச்சக்கட்டப் புள்ளியை பூமி ஏற்கனவே தொட்டு விட்டதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களால் பூமி வெப்பமடைவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனால் பனி உருகுதல், அதிக வெப்பம், கடுங்குளிர் போன்றவற்றால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பருவநிலை மாற்றத்தை டிப்பிங் பொயின்ட் என்ற அளவீட்டு முறை மூலம் விஞ்ஞானிகள் அளந்து வருகின்றனர்.

இந்நிலையில் டோமினோ விளைவு எனப்படும் சங்கிலித் தொடர் போன்ற நிகழ்வுகளால்



பூமி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்தின் எக்ஸடர் பல்கலைக்கழக பேராசிரியர் டிம் லென்டான் தெரிவித்தார்.

டிப்பிங் பொயின்ட் முறையில் ஏற்கனவே உச்சபட்ச அளவான 9 புள்ளிகளைப் பூமி எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் பாதிப்புகள் அதிகம் இருக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (ஜ-2)

# பாடசாலைகளில் டெங்கு தாக்கமற்ற சூழலை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## கல்வியமைச்சு அதிகாரிகளுக்கு பணிப்புரை

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின்பாது காப்பைக் கருத்திற்கொண்டு பரீட்சை நடத்துவதற்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் தினங்களில் எந்த இடையூம் இன்றி சுகாதார வைத்திய அதிகாரியுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சு பாடசாலை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.**

பாடசாலைகளுக்கான மூன் றாம் தவணைக் காலம் முடிவு ற்று 2020 ஆம் ஆண்டின் முத லாம் தவணைக்காலம் ஆரம்ப மாகுவதற்கு முன்னர் பெற்றோர் களை இணைத்துக் கொண்டு பாடசாலை சுற்றுச்சூழலை டெங்கு நுளம்பு தாக்கமற்ற பாதுகாப்பான சுற்றுச்சூழலாக மாற்ற நடவடி க்கை எடுக்குமாறும் கல்வி அமைச்சு அனைத்து பாடசாலை பிரதானிகளுக்கும் மேலும் ஆலோசனை வழங்கியுள்ளது.

எனினும் பரீட்சைக்கு முன் னர் பாடசாலைகளுக்குள் பாது காப்பான சுற்றுச் சூழலை உறு திப்படுத்த நடவடிக்கை எடுக்கு மாறு கல்வியமைச்சு அறிவுறுத்தி யதுடன் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை நாடளாவிய ரீதியி லுள்ள அனைத்துப் பாடசாலை களிலும், பிரிவெனாக்களிலும் கல்வியியற் கல்லூரிகளிலும் ஆசிரியர் கல்லூரிகளிலும் வலய மற்றும் வட்டார கல்வி காரியா லய நிறுவனங்களிலும் தொடர் ந்து முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சு மாகாண அதிகாரிக ளுக்கு ஆலோசனை வழங்கியு ள்ளது. (ஐ-2)

# கொழும்பு மாநகரசபையை கலைக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்

## ரோஸி சேனநாயக்க உறுதி



(கொழும்பு)

பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கொழும்பு மாநக ரசபையை கலைக்கவோ விசேட ஆணையாளருக்கு கீழ் கொண்டு வரவோ ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் என்றும் ஜனாதிபதி அவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுப்பார் என நான் ஒருபோதும் நம்பப்போவதில்லை என்றும் கொழும்பு மாநகர முதல்வர் ரோஸி சேனநாயக்க உறுதிபடத் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையின் மாதாந்த சபை அமர்வு நேற்று முன்தினம் முதல்வர் ரோஸி சேனநாயக்க தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பிர தான நடவடிக்கைகள் இடம்பெ ற்ற பின்னர் கொழும்பு மாநா கரசபை எல்லையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்க ளின் பிள்ளைகளுக்கு பாட சாலை உபகரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கேள்வி கோரல் தொடர்பாக எதிர்க்கட்சி களால் முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டு தொடர்பில் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தோட்டச் சேவையாளர்கள் ஆர்ப்பாட்டம்




(கண்டி)

மாதாந்தக் கொடுப்பனவு உட் பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தோட்ட சேவை யாளர்கள் சங்க உறுப்பினர் களால் தலவாக்கலையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

'கூட்டு ஒப்பந்தத்தை மீறாதே' , 'சேமலாப நிதியம்,சேமலாப சேவை நிதியம் ஆகியவற் றின் 25 சதவீதத்தினை உடனே வழங்கு', 'உடன்படிக்கைகளை மீறாதே' போன்ற பல்வேறு வாச கங்கள் எழுதிய பதாதைகளை காட்சிப்படுத்தியவாறே போராட்டம் முன்னெடுக்கப்பட் டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தல வாக்கலை, சென்.கிளாயர், பேரம், ட்ரூப் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 100 இற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

"மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனி உள்ளிட்ட 18 பெருந்தோ ட்ட கம்பனிகள் இணைந்து இம் மாதம் 6 ஆம் திகதி தோட்ட சேவையாளர் சங்கத்துடன் உடன் படிக்கை ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டன.

அதில் 25 சதவீத சம்பள அதிகரிப்பினை வழங்க இண க்கம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஆர்பிக்கோ மற்றும் ரிச்ட் பீரிஸ் கம்பனிக்கு சொந்தமான மஸ் கெலியா, நமுனுகுல, கேகாலை உள்ளிட்ட பெருந்தோட்ட கம்பனி கள் இதனை கொடுப்பனவாக வழங்குவதற்கு இணக்கம் தெரி வித்திருந்தன.

இதனை அடிப்படைச் சம்பள த்தில் சேர்க்காதுள்ளதால் சேம லாப நிதியத்துடன் வழங்கப்படும் ஏனைய அனைத்துக் கொடுப்ப னவுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த அநீதி காரணமாகவே தோட்ட சேவையாளர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கள்வர்கள்

ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் என்னிடம் கேள்வி கேட்டார்.

"திருடர்கள் எத்தனை வகை தெரியுமா உனக்கு?" இதுதான் அவர் கேட்ட கேள்வி. எதற்காக என்னைப் பார்த்து அந்தக் கேள்வி கேட்டாரோ தெரியவில்லை... இருந்தாலும் நான் அவருக்குப் பதில் சொன்னேன்.

"திருடர்கள் எத்தனையோ வகை உண்டு சேர்...கார் திருடன், சைக்கிள் திருடன், முகமூடித் திருடன் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இருந்தாலும் என் சிற்றறிவுக்கு எட்டிய வகையில் திருடர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்று நினைக் கிறேன். ஒன்று இரவிலே திருடுகின்ற திருடன், இன்னொன்று பகல் திருடன்" என்றேன்.

பெரியவர் சிரித்தார். என்ன சிரிக்கிறீங்க என்றேன். "கள்வர் கள் நான்கு வகை" என ஆரம்பித்தார் அவர். எப்படி என்று கேட்டேன். சாப்பாட்டுக்கு இல்லாமல் திருடுகிறார்கள் பாருங்க அது ஒரு வகை. "சாப்பாடு இருந்தும் திருடுகிறார்கள் பாருங்க அது ஒருவகை.

இதைத் தவிர இன்னும் இரண்டு வகைத் திருட்டு உண்டு. அது என்னவென்றால், ஆண்டவனிடம் இருந்து திருடும் திருட்டு ஒன்று. நம்மிடம் இருந்து ஆண்டவன் திருடும் திருட்டு ஒன்று" என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன சேர் ஆண்டவனையே திருடன் என்று சொல்கிறீர்கள்" என்று ஆச்சரியமாகக் கேட்டேன்.

"ஆமாம்...ஆண்டவனை கள்வன் என்று சொல்வதில்லையா? காஞ்சிபுரத்திற்குப் பக்கத்திலே "திருக்கார்வனம்" என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே உள்ள ஓர் பெருமாளுக்கு கள்வர் என்று தான் பெயர். அதுமட்டுமல்ல திருமங்கையாழ்வார் தம்முடைய திருநெடுந்தாண்டகத்திலே "கார்வனத்துள்ளாய்...கள்வா" என்று தான் அழைக்கிறார்" அப்படி என்று நிறைய உதாரணம் எல்லாம் சொல்ல ஆரம்பித்தார்.

அதன் பின்பு அவரிடம் பேசி நான் புரிந்து கொண்ட விபரங் களை இப்பொழுது உங்களிடம் சொல்கிறேன்.

அவர் சொன்ன முதல் வகைத் திருடர்கள்: சாப்பாட்டுக்கு இல்லாமல் திருடுகிறவர்களைத் திருத்தி விடலாம். சாப்பாட்டுக்கு இருந்தும் பணம் சேர்க்கனும் என்கிற ஆசையாலே பொய்க் கணக்குகள் எல்லாம் எழுதுகிறார்கள் பாருங்கள் அவர்கள்தான் இரண்டாவது வகை.

மூன்றாவது வகைத் திருட்டுத்தான் பெரிய திருட்டு.

இறைவனுக்கு சொந்தமானதை நம்முடையது என்று நினைக் கிற திருட்டு. எது இறைவனுக்கு சொந்தமானது ? பகவா னுக்குச் சொந்தமான "ஆத்மா" வை நம்முடையது என்று நினைக்கிறது தான் அந்த மாபெரும் திருட்டு.

இதுக்குப் பேர்தான் "ஆத்மாபஹாரம்!" சரி இதுக்குப் பரிகாரம் என்ன?

"எல்லாம் இறைவனுடையது. நமக்கு ஒன்றுமில்லை" என்று நினைக்கிறதுதான் இதற்குப் பரிகாரம். இது எல்லாம் இருக் கட்டும் நாலாவது திருட்டு என்று சொன்னோமே! ஆண்டவன் நம்மிடம் இருந்து திருடுவது எப்படி?

ஆண்டவனை "கள்வன்" என்று சொல்கிறார்கள்... அதுசரி அவர் எதைத் திருடினார்.

இப்பொழுது இன்னொருவருக்குச் சொந்தமான ஒன்றை எடுத்து வைத்திருக்கிறது தான் கள்ளத்தனம்.

ஆனால் ஆண்டவன் என்று எடுத்துக் கொண்டால் இருக்கிறது எல்லாம் அவனுக்குச் சொந்தம். அப்படி இருக்கிறபோது அவரை எப்படி கள்வன் என்று சொல்கிறது.

இதற்கு என்ன விளக்கம் சொல்கிறார்களென்றால்...

ஆண்டவனுக்கு உருவமே கிடையாது. அரூபமா இருக்கிறவன் அப்படி உள்ள பகவான் எங்களை மாதிரியே கை, கால், மூக்கெ ல்லாம் இருக்கு! இந்த உருவம் எங்களிடமிருந்து திருடினது தானே. அவன் தன்னுடைய உண்மையான திருமேனியை நமக் குக் காட்டாமல் அதாவது தரிசனம் அளிக்காமல் இருக்கிறது கள்ளத் தனம் தானே.

அதனாலேதான் இதுவும் ஒரு பெரிய திருட்டு. இருக்கிறதிலேயே பெரிய திருட்டு என்கிறார் என்னிடம் பேசிக்கொண்டிருந்த பெரிய வர்.

திருட்டை ஆன்மீக நோக்கத்திலே அவர் பார்க்கிறார். எங்களு டைய பார்வையிலே இதைவிட அபூர்வமான திருட்டெல்லாம் இங்கேயுண்டு.

அபூர்வமான திருடர்களும் உண்டு. ஒரு திருடன் சிறையிலிரு ந்து விடுதலையாகி வெளியே போனான். கொஞ்ச நாளிலே மறுபடி யும் திரும்பி சிறைக்கு வந்துவிட்டான். அப்போது சிறை அதிகாரி அவனுக்கு அட்வைஸ் செய்தார்.

ஏன்பா இப்படி அடிக்கடி தப்பு செய்துவிட்டு சிறைக்கு வந்து விடுகிறியே! உனக்கு சொந்த பந்தம் ஏதும் இல்லையா? உன் அப்பா, அண்ணன், தம்பிகள் கூட சேர்ந்து வாழ வேண்டும் என்கிற ஆசை இல்லையா? என்று கேட்டார்.

"அவர்களோடு சேர்ந்து வாழ வேண்டும் என்கிற ஆசை எனக்கு நிறைய உண்டு சேர்" என்றான் அவன்.


"பிறகேன் இப்படி சிறைக்கு வந்துவிடுகிறாய்?" என்றார் இவர்.

"அவர்கள் எல்லோருமே இங்கே தானே சேர் இருக்கிறார்கள்" என்றான் அவன்.

# யாழ்.-புத்தளம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு விசேட திட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு



(கொழும்பு)

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் பெண் தலைமைத்துவ குடும்பங்களை உள்வாங்கி அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விசேட திட்டம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

பேலியகொட சந்தை நம்பிக்கை சபை உறுப்பினர்கள் மற்றும் இலங்கை வங்கி அதிகாரிகளுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட்ட அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் அமைச்சில் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பிலே மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் குறித்த திட்டத்தை செயற்படுத்துவதற்கு இலங்கை வங்கியின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா தெரிவித்தார்.

கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற கொழும்பு பேலியகொட மீன் சந்தையை புனரமைப்புச் செய்து வர்த்தகர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் தேவையான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இன்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பேலியகொட மீன் சந்தையில் காணப்படும் பிரச்சினைகளில் உடனடியாகத் தீர்வு காணக்கூடிய விடயங்கள் தொடர்பாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

அண்மையில், பேலியகொட மீன் சந்தைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், மீன் சந்தையில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாக நேரடியாக ஆராய்ந்திருந்த நிலையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மீது அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது

## முன்னாள் அமைச்சர் தலதா குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக கோட்டபாய ராஜபக்ஷவிற்கு வாக்களிக்க வேண்டும் என்று தேர்தல் பிரசாரத்தின் போது குறிப்பிட்டார்கள்.

அவ்வாறு கூறி ஆட்சிபீடமேறியவர்களின் செயற்பாடுகள் தேசிய பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையிலா அமைந்திருக்கின்றன? சுவிட்சர்லாந்து தூதரக அதிகாரிக்கே பாதுகாப்பு இல்லையென்றால் சாதாரண மக்கள். ஊடகவியலாளர்களின் நிலை என்னவாகும்? இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் வருத்தம் தெரிவிக்கும் அதேவேளை அவற்றைக் கடுமையாகக் கண்டனம் செய்கின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் 2015 ஆம் ஆண்டில் எமக்கு ஆணை வழங்கினார்கள். கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுப்பதுடன், நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்பதே மக்கள் எமக்கு ஆணையை வழங்குவதற்கான பிரதான காரணமாக இருந்தது.

அதன்படி அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தைக் குறைத்து, அதனைப் பாராளுமன்றத்திற்குப் பெற்றுக்கொடுத்தோம். நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தியதுடன், சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தோம்.

பொலிஸ் திணைக்களத்திற்கு எந்தவொரு அழுத்தங்களையும் வழங்காத அதேவேளை, அவர்களுடைய விசாரணைகளின் தலையீடு செய்யாத ஒரே அரசாங்கம் எம்முடையது மாத்திரமே என்பதை இப்போதும் உறுதியாகக் கூறமுடியும்.

19 ஆவது திருத்தத்தின் ஊடாக அமைக்கப்பட்ட சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலமாகவே இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அமைதியானதும் நியாயமானதுமான முறையில் இடம்பெற்று முடிந்திருக்கிறது.

எனினும் தற்போது அந்த 19 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தில் சிலர் கூறிவருகிறார்கள்.

அதேபோன்று புதிய அரசாங்கம் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக இருந்த ஷானி அபேசேகர சுமார் 10 வருட காலம் அப்பிரிவில் பணியாற்றியவராவார்.

நீண்டகாலம் அனுபவம் என்பது ஒருபுறமிருக்க அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் பெருமளவான அரசநிதி செலவிடப்பட்டிருக்கும். அவ்வாறிருக்க தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவு தொடர்பில் எவ்வித விளக்கமும் இல்லாத ஒருவரை அதன் பிரதானியாக நியமித்திருக்கின்றார்கள்.

அதுமாத்திரமன்றி 704 குற்றப்புலனாய்வு அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் தடை விதித்திருக்கும் நிலையில் சட்டமாதிபர் திணைக்களத்தின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதிலும் இடையூறுகள் ஏற்படும்.

நாட்டில் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வாக்களிக்க வேண்டும் என்று தேர்தல் பிரசாரத்தின் போது குறிப்பிட்டார்கள்.

அவ்வாறு கூறி ஆட்சிபீடமேறியவர்களின் செயற்பாடுகள் தேசிய பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையிலா அமைந்திருக்கின்றன? சுவிட்சர்லாந்து தூதரக அதிகாரிக்கே பாதுகாப்பு இல்லையென்றால் சாதாரண மக்கள், ஊடகவியலாளர்களின் நிலை என்னவாகும்? இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் வருத்தம் தெரிவிக்கும் அதேவேளை அவற்றைக் கடுமையாகக் கண்டனம் செய்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பரிந்துரைகளை முன்வைப்பதற்கு ஆறு பேர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

அரசாங்க நியதிச்சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிக நிறுவனங்களுக்கு திறமையும் தகைமையும் கொண்டவர்களை நியமிப்பது தொடர்பான பரிந்துரைகளை முன் வைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதி அலுவலகம் ஆறு தொழில் வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்தது.

முன்னாள் அமைச்சரவையின் செயலாளரும் அரசதுறை பற்றிய விரிவான அனுபவங்களைக் கொண்டவருமான சிரேஷ்ட அரச அதிகாரி சுமித் அபேசிங்கவின் தலைமையிலான இக்குழுவில் பிரசன்ன ரத்நாயக்க, கலாநிதி நாலக்க கொடஹேவா, டயன் கோமஸ், கலாநிதி பிரசன்ன குணசேன மற்றும் பேராசிரியர் ஜகத் வெல்லவத்த ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள தகைமை வாய்ந்த தொழில் வல்லுநர்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்தும் அறிவிப்பை 2019 டிசெம்பர் 18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-7)

# ஐ.தே.கவுக்குள் எந்தப்பிளவுமில்லை

## மத்தும பண்டார சமாளிப்பு

(கொழும்பு)

ஐ.தே.கவுக்குள் எந்தவிதப் பிளவும் இல்லையெனவும் பிரச்சினைகள் இருப்பின் அடுத்து வரும் நாட்களில் அதனை நாம் தீர்த்துக் கொள்வோம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கட்சியில் ஏற்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைமை குறித்த சர்ச்சை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அரசாங்கம் அமைத்து இன்னும் 10 நாட்களே ஆகின்றன.



எதிர்க்கட்சித் தலைமையை தீர்மானித்துக் கொள்ள அவசரம் ஏதுமில்லை. ஏன் அவசரப்படுகின்றீர்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (இ-7)

# முதல் முறையாக இலங்கைக்கு வந்தான் பார்த்தீனியத்தின் எதிரி மெக்ஸிக்கன்/ பார்த்தீனியம் வண்டு




கலாநிதி கந்தையா பகீரதன்
தலைவர்,
விவசாய உயிரியல் துறை, விவசாய பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
அறிவியல் நகர், கிளிநொச்சி.

**பார்த்தீனியம் வண்டு எவ்வாறு இலங்கைக்கு வந்திருக்கும்!!!**

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள தீவு என்பதால் கடல் தாண்டி பார்த்தீனியம் வண்டு எவ்வாறு இலங்கைக்கு வந்தது or வருவது சாத்தியமா? என்ற கேள்வி பலர் மனதில் எழத்தான் செய்யும். யாழ்ப்பாணம் தென்னிந்தியாவிற்கு மிக கிட்டவுள்ள பகுதி அத்துடன் இந்திய அரசின் நிதி உதவியுடன் பலாலியில் உள்ள யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் புனரமைக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு ஐப்பசி-கார்த்திகை மாதம் முதல் தென்னிந்தியாவின், திருச்சி, மதுரை, சென்னை போன்ற விமான நிலையங்களுக்கான சர்வதேச விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. மேற் குறிப்பிட்ட விமான நிலையங்களில் இருந்து பலாலிக்கு வந்தடைந்த விமானம் மூலம் தான் இவை வலி.வடக்கு பிரதேசத்தை வந்தடைந்திருக்க வேண்டும் என்பது எனது அறிவுக்கு எட்டிய உண்மை. மேலும், வலி.வடக்கு பகுதி மக்களற்ற இராணுவக் கட்டுப்பாடில் இருந்த போது பார்த்தீனியமற்ற பகுதியாக இருந்தது. ஆனால் அது தற்போது பார்த்தீனியம் நிறைந்த காடாக (குறிப்பாக பலாலியை அண்டிய பிரதேசம்) காணப்படுவதால் பலாலியை அண்டிய தெல்லிப்பழை பிரதேசத்தில் இது குடியேறி இருக்கிறது (படம் 2). அத்துடன் தற்பொழுது மழைகாலம் என்பதால் இப்பிரதேசத்தின் அதிக வெப்பநிலை 28°C-30°C. இவ்வெப்பநிலை பார்த்தீனியம் வண்டின் பெருக் கத்தை அதிகரித்து இருக்கிறது. அது மட்டுமன்றி இவை பறந்து வருவதானால் எப்பவோ இலங்கைக்கு வந்திருக்கும். அதுவும் மன்னர் உடாக வவுனியாவை வந்தடைந் திருக்கும். எனினும், மேலதிக துரித ஆராய்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறை இறங்கி உள்ளது.

**பார்த்தீனியம் வண்டு எப்படி இருக்கும்? எப்படி இனம் காணுவது?**

இவ் வண்டானது கிரிசொமளிடே குடும்பத்தை சேர்ந்த வண்டு. இவ் வண்டு சாதுவான கபில நிறத்தில் இருப்ப தோடு மட்டுமல்லாது மிகவும் பிரகாசமாகக் காட்சியளிக்கும். இவ் வண்டின் இறக்கைகள் கபில நிறத்தின் மேல் கறுப்பு நிறத்திலான பாம்பு போன்ற வளை மற்றும் நெளி கோடுகள் காணப்படும் (படம் 3). இவ் வண்டுகள் 0.7 cm-1.3 cm அளவில் இருப்பதுடன் மேற்பகுதி குவிவாகவும் கீழ் பகுதி தட்டையாகவும் காணப்படும். ஆண் வண்டுகள் பெண் வண்டை விட உருவத்தில் சிறியவை. இவ் வண்டுகள் மத்திமமான வேகத்துடன் நகரக்கூடியன. எனவே கையால் பிடிப்பது இலகு. கையால் பிடித்தவுடன் அசைவின்றி இறந்தது போல் தப்பிப்பதற்காக பாசாங்கு செய்யும். இவ் வண்டின் குடம்பி பழுப்பான வெள்ளை-பச்சை நிறத்தில் காட்சி அளிப்பது தான், மிகக் குறைந்த வேகத்துடன் நகரக் கூடியன. இவை நான்கு வெவ்வேறான உருவவியல் மாற்றங்கள் ஊடாக நிறை உடலி வண்டாக மாறும். பெண் வண்டுகள் மஞ்சள் நிறத்திலான முட்டைகளை பார்த்தீனியம் தாவரத்தின் இல்லை மற்றும் பூ ஆகிய பகுதிகளில் கூட்டமாகவோ அல்லது தனியாகவோ இடும்.





படம் 4: பார்த்தீனியம் வண்டின் தாக்கம்
அனைவருக்குமான வேண்டுகோள்

**மெக்ஸிக்கன் வண்டு எவ்வாறு பார்த்தீனியத்தை கட்டுப்படுத்துகிறது!!!**

இவ்வண்டின் குடம்பி மற்றும் நிறையுடலி வண்டு, முதிர்ந்த பார்த்தீனியத்தின் இலை மற்றும் பூ போன்ற வற்றை மிக வேகமாக உண்பதனால், அதிக தாக்கத்துக் குள்ளான பார்த்தீனியம் இலை கள் மற்றும் பூக்கள் அற்று வாடி இறக்கும் (படம் 4). இளம் பார்த்தீனியத்தின் இலைகளை உண்பதனால் ஒளித்தொகுப்பு நடைபெறா மல் அவை இறக்கும். பூக்களை உண்பதனால் விதை உற்பத்தி இல்லாமல் போகும். அல்லது குறையும் மற்றும் பூக்கள் வாடி உதிரும். இதனால் பார்த்தீனியத்தை எந்த வித செலவும் இல்லாமல் கட்டுக்குள் கொண்டு வரலாம் மற்றும் நாளடைவில் பார்த்தீனியம் இல்லாமல் போகும்.

**அனைவருக்குமான வேண்டுகோள்**

இந்த மிக உன்னதமான நேரத்தில், பார்த்தீனியம் கட்டுப்படவேண்டும் என்பதற்காக எந்தவிதமான களை நாசினிகளை யாரும் பாவிக்க வேண்டாம். ஆனால் வேருடன் பிடுங்கி எரியுங்கள். களை நாசினிகள் மற்றும் பீடை நாசினிகள் இவ் வண்டை அநியாயமாகக் கொன்றுவிடும். அரிய சொத்தான வண்டை அழித்துவிடாதீர்கள். இவ் வண்டை பற்றிய துரிதமான ஆராய்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறை இறங்கியுள்ளது. இதனால் மேலும் பல புதிய திருப் பங்கள் ஏற்படலாம். எது எவ்வாறாயினும், இந்தியாவில் இருந்து வேண்டா விருந்தாளியாக வந்த பார்த்தீனியத்தை, விரும்பி இலங்கைக்குக் கொண்டு வந்தபோது வரவிரும்பாத பார்த்தீனியம் வண்டு தானாக வந்து தாக்கியிருக்கிறது பார்த்தீனியத்தை. வந்த செல்வத்தை எட்டி உதைக்காமல் விரும்பி அழைத்து வேரறுப் போம் பார்த்தீனியத்தை.

(முற்றும்)

# சிறைச்சாலைகளுக்குள் அதிகரித்து காணப்படும் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்க ஐ.நாவுடன் இணைந்து செயற்படத் தயார்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப் பொருள் மற்றும் குற்றங்களை தடுப்பது தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பணிப்பாளர் Miwa Panholzer Kato மற்றும் அந்தப் பிரிவின் உலகலாவிய கப்பல் பயணங்களில் இடம்பெறும் குற்றங்களை தடுப்பது குறித்த பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.



நீதிமன்றம், மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது சிறைச்சாலைகளுக்குள் போதை பொருள் பாவனை மற்றும் வெளியில் போதைப் பொருள் விற்பனை ஆகியவற்றை இல்லாதொழிப்பது தொடர்பிலும் இதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக ஐ.நாவின் தலையீட்டுடன் சிறைச்சாலைகளில் காணப்படும் போதைப் பொருள் பாவனையை ஒழித்து போதைப் பொருள் பாவனை அற்ற சிறைச்சாலைகளாக மாற்றுவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் பிற உதவிகளைப் பெறுவதற்கு தயார் எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதன்போது தெரிவித்தார்.

இதற்கு ஐ.நாவுடன் இணைந்து செயற்பட எண்ணியுள்ளதாகவும் கைதிகளின் நலன்புரி விடயங்கள் உள்ளிட்ட சகல விடயங்களிலும் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# சுரக்ஷா காப்புறுதித் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் பந்துல

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தை எதிர்காலத்தில் இதனைவிட மிகக் சிறப்பாக முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் விசேட அறிவிப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



விலைமனுக் கோரல். இன்றி மாணவர்களுக்கு காப்புறுதி வழங்கப்பட்டமை குறித்த ஒப்பந்தம் தொடர்பில் உரிய வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-2)

# பொலிஸ் ஆணைக்குழுவின் சட்டப்பணிப்பாளராக ருவான் குணசேகர நியமனம்

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குண்சேகர, பொலிஸ் ஆணைக்குழுவின் சட்டப்பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் கோரிக்கையினைத் தொடர்ந்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–193

## தூய்மையான இலங்கையெனும் இலக்கை நோக்கி!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 206


தூய்மையான சுகாதாரமான வாழ்க்கை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே பலருடைய எதிர்பார்ப்பாகும். தனிமனித சுகாதாரம் மிகவும் முக்கியமானது. நாம் உள்ளத்தில் தூய்மையானவர்களாக, உடலில் சுத்தத்தைப் பேணுபவர்களாக இருந்தால் எமது எண்ணங்களும் செயற்பாடுகளும் அர்த்தமுள்ளதாக இருக்கும். தனிமனிதனால் ஆகாதது என்று எதுவுமில்லை. மனத்தில் தூய்மையானவர்களாக முதலில் இருக்கக் கற்றுக் கொள்வோம். இது ஒன்றும் சாத்தியமாகாத விடயமல்ல. நல்ல எண்ணங்கள், சிந்தனைகள், கனவுகள் மற்றும் நடவடிக்கைகள், அன்பாகப் பேசுதல் அன்பாக இருத்தல், மற்றையவர்களுக்கு உதவுதல் இவையனைத்தும் நல்ல மனிதர்களாக, இத்தேசத்தின் நற்பிரஜைகளாக நாம் வாழ்வதற்கான அடிப்படை தத்துவங்கள்.

இதனையே ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தி இலக்கான 6 (Sustainable Development Goal 6) இன் கருப்பொருளாக சுத்தமான நீரும் துப்புரவான இடமும் (Clean water and Sanitation) முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கின்றது. சுத்தமான நீரின்றி எமது வாழ்க்கையே கேள்விக்குறியாகி விடும். நீரின்றி இவ்வுலகமேது? நீரினது அவசியம் உணரப்பட்டாலும் துப்புரவாக இருப்பது பற்றி அதனது அவசியம் பற்றி எம்மவர்கள் மத்தியில் கரிசனை இல்லாமை ஏன் என்பது இன்னமும் புரியவில்லை.

துப்புரவாக தமது தேசத்தை வைத்திருக்க வேண்டும் என் அறிவித்து அதனை கொள்கைப் பிரகடனமும் செய்து இன்னும் ஒருபடிமேலே சென்று அதனை செயன்முறையிலும் காட்டியவர் எமது அண்டை நாடான இந்தியாவின் தற்போதைய பிரதமர் ஸ்ரீமான் நரேந்திர மோடி. ஆசியாவின் பெரிய நாடாக அதிக மக்களைக் கொண்ட தேசமாக இருக்கும் பாரத தேசத்தின் பிரதமர் சுத்தமான வாழ்க்கைக்குள் நாம் வாழ்வதனை உதாரணமாக்கி அதனர்த்தத்தை அனைவருக்கும் உணர்த்தியிருக்கின்றார். பாரதத்தின் நகரங்களை இன்னும் மக்கள் குடியிருப்புக்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கான அவரதுஅறைகூவல் அனைவருக்குமான அவசர செய்தியாகவே பார்க்கலாம். அதனை அந்நாட்டுமக்கள் தமது தலையாய கடமையாக எண்ணி நடைமுறைப்படுத்துவதிலும் அக்கறை காட்டியிருக்கின்றார்கள்.

இந்தியாவின் சிக்கிம் மாநிலம் இதற்கெல்லாம் முன்மாதிரியாக 1998 இலேயே இவ்வாறாக ஒருதரம் பயன்படும் பிளாஸ்ரிக் பயன்பாட்டிற்கு தடைவிதித்திருக்கின்றார்கள். குறிப்பாக கழிவுகளை முகாமைத்துவப்படுத்தல் என்பதில் பல பொறிமுறைகளை உள்வாங்கி அதனை செய்து காட்டியும் இருக்கின்றார்கள். ஒரு முறை பயன்படுத்தப்படும் உக்காத பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை கணிசமான அளவிற்கு குறைத்திருக்கின்றார்கள். இதனை கோயம்புத்தூர் மற்றும் பல பகுதிகளில் நேரடியாகக் காணும் வாய்ப்பும் கிடைத்தது. மக்கள் ஒன்றுபட்டு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையால் எழும் பிரச்சினைகளைக் குறிப்பாக சூழல் மாசடைதலை உணர்ந்து இந்த கைங்கரியத்தை செய்திருக்கின்றார்கள். இந்த மக்கள் மயப்பட்ட மனமாற்றம் பெரியதொரு சாதனை என்றே கூறலாம்.

இந்தியாவில் 2022 ஆம் ஆண்டளவில் ஒருநாள் பயன்படும் பொலித்தீன் மற்றும் சொப்பிங் பைகளுக்குத் தடை முழுமையாக விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது பாரதேசத்தின் சூழல் தொடர்பான கரிசனையும், கழிவு முகாமைத்துவத்திலுள்ள அக்கறையும், கடற்பகுதியைப் பாதுகாக்கும் முன்னேற்பாடும். இன்னும் பச்சைவீட்டு வாயுங்களினால் ஏற்படும் சூழல் மாசடைதலுக்கு தீர்வாகச் செய்யப்படும் பாரிய முயற்சி என்பதனையும் இதில் பதிவு செய்ய விரும்புகின்றோம்.




Hierarchy of Preferred Solid Waste Management Strategies

Paradigm Shift for the 21st Century

### உலக நாடுகளில் பொலித்தீன் பாவனைக்குத் தடை

ஒருதரம் பயன்படும் சொப்பிங் மற்றும் பொலித்தீன் பயன்பாட்டை முதலில் தடை செய்த நாடு ருவாண்டா என செய்திகள் தெரிவிக்கின்றன. அதனைத் தொடர்ந்து கென்யாவும் மக்கள் அதிகமாகக் கூடும் தேசிய பூங்காக்கள் மற்றும் பார்க்குகள் இடங்களில் சொப்பிங் மற்றும் பொலித்தீனை தடை செய்திருக்கின்றன. குறிப்பாக பசுக்களின் வயிற்றறையில் இவ்வாறு சொப்பிங் மற்றும் பொலித்தீன் பைகள் கண்டு பிடிக்கப்பட்டதனைத் தொடர்ந்து இவ்வாறான நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் பல மாநிலங்கள் ஒருதரம் பயன்படுத்தும் பொலித்தீன் பாவனையைத் தடை செய்திருக்கின்றார்கள். பிரான்ஸ், தாய்வான் மொன்றியல் என பல நாடுகள் இவ்வரிசையில் இணைந்துள்ளமை சூழல் ஆர்வலர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய செய்தி. இப் பூமிப்பந்தின் தேசமெங்கும் விரிவுபட்டு சாதாரணமாக உக்காத பொலித்தீன்களை தடை செய்ய முனைந்திருப்பது நல்லதொரு முயற்சியாகப் பார்க்கலாம்.

### இலங்கையிலும் பிரதேசங்களின் தூய்மை

எமது நாட்டிலும் தற்போதைய புதிய ஜனாதிபதியின் முன்னிலைப்படுத்தப்பட்ட கொள்கையாக நகரப்பகுதிகளை இன்னும் ஏனைய பிரதேசங்களை தூய்மையாக வைத்திருப்பதுபற்றிய அறிவிப்பு இலங்கைத்தீவு ஆசியாக் கண்டத்தில் சுத்தமான தேசமாக ஒளிர்வதற்கான ஆரம்பம் எனக் கூறலாம். இதற்காக முப்படைகளின் உதவியும் பெறப்பட்டிருப்பது இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காகவும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காகவும் எனலாம். குறிப்பாக முறையற்ற கழிவுகளால் ஏற்படும் இடர்பாடுகள் பல. கழிவுகள் தேங்கும் போது அவற்றில் மழைநீர் தேங்கி நுளம்பு பெருக்கமடைவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாலும் அதனால் டெங்கு நோய் தீவிரமடைவதும் எமது மக்களினது கவனத்தையும் ஈர்த்திருக்கின்றது. இக்கழிவுகளை அகற்றி முறையாக மீள் சுழற்சிக்குட்படுத்தினால் நாம் எதிர்பார்த்திருக்கின்ற தூய்மையான தேசத்தினை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் வெற்றியளிக்கும் என்பது திண்ணம்.

எமது நாட்டில் கழிவு முகாமைத்துவம் பல வழிகளில் மேற்கொள்ளப்பட்டாலும் கழிவுகளை முறையாக, முழுமையாக முகாமைத்துவம் செய்வதற்கான இயல்பு நிலையில் இடர்படுவ்தாகவே தெரிகின்றது. இது தனியே அரசாங்கத்தினால் மட்டும் செய்யக்கூடிய செயலன்று. மாறாக அனைத்து மக்களும் தத்தமது பங்களிப்பை வழங்கினாலேயன்றி இது சாத்தியப்படாது. நகரப்பகுதிகளின் கழிவகற்றல் பொறிமுறை சிறப்பாக இயங்குவதற்கான சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் சட்டதிட்டங்கள் இன்னும் மேலும் இறுக்கமாக இருக்க வேண்டியதும் அவசியமானதாகும். இச்சட்டதிட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதும் இந்த கழிவு முகாமைத்துவத்தில் பங்குபற்றும் ஊழியர்கள் மற்றும் அவர்களுக்கான வசதிவாய்ப்புக்களை அதிகரிக்கப்படுமிடத்து ஒன்றிணைந்த கழிவுமுகாமைத்துவம் சாத்தியமான விடயமே. நகரக் கழிவுகளுள் ஏறக்குறைய 80 சதமீதமானவை சேதனக் கழிவுகளே. அவ்வாறாயின் இவற்றை தகுந்த இடத்தில் முறையாக மீள் சுழற்சி செய்து மீண்டும் பாவிக்கத்தக்க சேதன உரமாக மாற்றி கழிவுகள் உருவாகுமிடத்திலேயே சேதன உரமாக தாவரங்களை வளர்க்க பயன்படுத்திக் கொள்ளலாம். ஏனைய கழிவுகளை உரிய இடங்களுக்கு அனுப்பி மீள் சுழற்சி செய்து கொள்ளலாம்.

### யாழ்ப்பாண மாநகர சபைக்குரிய சவால்

யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவு முகாமைத்துவம் சீராக, முறையாக நடைபெறவில்லை என்பது பரவலான குற்றச்சாட்டு. இன்னமும் பல தெருக்களில் கழிவுகள் தேங்கியிருப்பதும் இதற்காக மக்கள் கொண்டு வந்து விசிறியெறிந்து விட்டுச்செல்லும் வீட்டுக் குப்பைகள் ஆங்காங்கே சிதறியிருப்பதுடன் சில வேளைகளில் பாதையின் குறிப்பிட்ட பகுதியை மூடிவிடும் அளவுக்குக் கூட இந்தக் குப்பைகளின் முகாமைத்துவம் இருக்கின்றது என்பதனை அறிந்து அப்பகுதி மக்கள் விசனப்படுகின்றனர். தற்போது மழைகாலமாதலால் தேங்கும் இவ்வாறான குப்பைகள் ஓடிச் செல்லும் மழை நீரினால் இழுத்துச் செல்லப்பட்டு வடிகான்களை அடைப்பதும் அதனால் நீர் தேங்கி நுளம்பு பெருகுவதற்கு வாய்ப்பாகவும் அமைந்து விடுகின்றது. ஒருபக்கம் டெங்கு நோயின் தீவிரம் அதிகரிக்கும் இக்கால கட்டத்தில் நுளம்புப் பெருக்கத்தைத் தவிர்க்க அவசியம் கழிவு முகாமைத்துவத்தில் அதீத அக்கறை காட்ட வேண்டியது அவசியமானதாகும்.

மாநகரப் பகுதிகளில் உருவாகும் கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்கும் பொறிமுறை நடைமுறைக்கு வந்தும் அதனை முறையாக நடைமுறைப்படுத்த முடியாமல் போனது எமது துர்ப்பாக்கியமே. இதற்காக மாநகர சபையினரைக் குற்றஞ்சாட்ட முடியாது. மக்களாக இந்த பொறிமுறையை உணர்ந்து தத்தமது வீடுகளில், தொழிற்சாலைகளில் உருவாகும் குப்பைகளை தரம் பிரித்து அதற்கென வைக்கப்பட்ட கொள்கலன்களில் இட்டாலே அவற்றை அகற்றி வேண்டிய மீள் சுழற்சியினை செய்வது சுலபமாகி விடும்.

இருப்பினும் இவ்வாறான கழிவுகள், குப்பைகள் முறையாக தினந்தினம் அனைத்து இடங்களிலிருந்தும் அகற்றப்படல் அவசியமாகின்றது.

### கழிவுகள் பலவிதம்

பொலித்தீன் பாவனையைத் தவிர்த்து பார்த்தால் ஏனைய கழிவுகளை மீள் சுழற்சி செய்வதற்கான வாய்ப்பினை நாம் இன்னும் அதிகரிக்க வேண்டியிருக்கின்றது. முதலில் எமது இல்லம் சுத்தமானதாக இருக்க வேண்டும் "சிறுகக்கட்டி பெருகவாழ்" என்னும் எமது மூதாதையரின் கூற்று தெய்வவாக்கு ஆகும்.

இவற்றின் தாற்பரீயத்தை நாம் உணர்ந்து கொண்டால் ஒவ்வொருவரும் அதில் அக்கறை கொண்டால் எமது இல்லத்தை, நாம் வாழும் சூழலை, நாம் பணிபுரியும் பிரதேசத்தை, அலுவலகத்தை சுத்தமானதாக, சுகாதாரமானதாக வைத்திருக்கலாம். குப்பைகளை, கழிவுகளை முறையாக தரம் பிரித்து அவற்றுக்குரிய கொள்கலன்களில் போட்டால் அவற்றை மீள் சுழற்சி செய்வதற்கு இலகுவாக இருக்கும்.

தூய்மை சுகம் தரும்.
தூய்மை சுகவாழ்வு தரும்.
தூய்மை சுய வாழ்வில்
அர்த்தம் தரும்.
தூய்மை சுபீட்சம் தரும்.

# சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்ட விவகாரம்

# அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் உத்தரவு!



**(கொழும்பு)**

**சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டதாக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.**

பாதுகாப்புப் பிரிவுக்கு இது குறித்து ஆலோசனை வழங்கியு ள்ளதாகவும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்வி களுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கொழு ம்பிலுள்ள சுவிஸ் தூதரகத்தின் இலங்கை அதிகாரி ஒருவர் வானில் கடத்தப்பட்டதாகவும் இவ்வாறு கடத்தப்பட்ட அவரிடம் பல்வேறு விடயங்கள் குறித்து கடத்தல்காரர்கள் விசாரணை செய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

சில தினங்களுக்கு முன்னர் சுவிஸில் தஞ்சம் கோரிய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதி காரி ஒருவர் குறித்தே தூதரக அதிகாரியிடம் இவ்வாறு விசா ரணை செய்யப்பட்டுள்ளதாகவும் இறுதியில் இதனை வெளியில் கூறினால் கொலை செய்துவிடு வதாக அச்சுறுத்தியதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலைமையிலேயே அறி க்கை சமர்ப்பிக்குமாறு உத்தர விட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஜ-2)

## மைத்திரியின் தீர்மானத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவின் தீர்மான த்திற்கு எதிராக உயர் நீதிமன்றத் தில் மனுத்தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

ரோயல் பார்க் கொலை வழக் கில் மரணதண்டனை விதிக்கப் பட்டிருந்த அந்தோனி ஜெயம விற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கியிருந்தார்.

இந்தநிலையில் அவரது தீர் மானத்திற்கு எதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை மகளிர் அமைப்பொன்று உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவில் சட்டமா அதி பர், சிறைச்சாலை ஆணையா ளர், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர், அந்தோனி ஜெயமஹ உள்ளிட்ட 10 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டு ள்ளனர்.

மரண தண்டனை கைதிக்கு மன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தபோதிலும், மனிதாபிமானமற்ற கொலைக் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங் கக்கூடாது.

எனவே மனுவை விசாரிக்க அனுமதி வழங்கவும், அவர்க ளின் அடிப்படை உரிமைகள் மீறப் பட்டுள்ளதாக அறிவிக்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன், ஜெயமஹ நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக் கும் வகையிலான இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் மேலும் அந்த மனுவில் கோரியுள்ளனர். (ஜ-2)

## வட பகுதிக்கான ரயில் சேவைகள் வழமைக்கு

(கொழும்பு)

வட பகுதிக்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பி யுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை முதல் உரிய அட்டவணையின் படி ரயில் சேவைகள் இடம்பெற்று வருவ தாக அந்த நிலையம் தெரிவித்து ள்ளது.

இதற்கமைய நேற்றுக்காலை கொழும்பில் இருந்து ரயில் ஒன்று புறப்பட்டுச் சென்றதாக தெரிவித்துள்ளது.

யாழில் இருந்து கல்கிஸை நோக்கி வந்த யாழ் தேவி கடுகதி ரயில் கல்கமுவ மற்றும் அமன் பொல ஆகிய ரயில் நிலையங்க ளுக்கு இடையில் நேற்று முன் தினம் தடம்புரண்டது.

இதனால் இந்த ரயில் கடவை யின் ஊடாக இடம்பெற்ற சகல ரயில் சேவைகளும் தடைப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1902

### யசோ

பகல் முழுக்க ஃபேஸ்புக்கு, வாட்ஸப்புனு முழிச்சுக் கிடக்காதேன்னு சொன்னாக் கேட்டாத்தானே...



### நவநிதன்

உயிர் தந்த தாய்க்கு ஒரு சொட்டு கண்ணீர் விட தயங்குபவன் கண்ணீர் தந்த காதலிக்காக உயிரை விட துடிக்கிறான்



காரணம் கொழுப்பு

### கிருபா

அம்மாவுடனான சண்டையை முடிவுக்கு கொண்டுவர "பசிக்குதம்மா" என்ற வார்த்தையே போதுமானது



### ரேக்கா

அடிக்கிற வெயிலுக்கு ஸ்கூல், காலேஜ்க்கு எல்லாம் லீவு விடுற மாதிரி...



வேலைக்கு போறவங்களுக்கு ஆபீஸ் லீவு விட்டா என்னவாம்..

### வேணி

ஆடு வாங்க லோன் கேட்கிறியே. ஏதாவது முன் அனுபவம் இருக்கா



இருக்கு சேர்... வாரத்துக்கு 3 முறை மட்டன் சாப்பிடுவேன்

### கிருஷ்ணலீலா

புருசன் பொண்டாட்டிய அடிச்சா நியூஸ் பேப்பர்ல வருது...




பொண்டாட்டி புருசன அடிச்சா ஜோக்கில மட்டும்தான் வருது நல்லாருக்குய்யா உங்க டீலிங்கு...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

"சிதறு தேங்காயல்ல; தியாகத்தில் வளர்ந்த கட்சி"

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை யாராலும் உடைக்க முடியாது



## சிறிநேசன் எம்.பி.திட்டவட்டம்

(ஏறாவூர்)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கைகளாலும், தியாகத்தாலும் வளர்த்தெடுக்கப்பட்ட கட்சி. அது சிதறு தேங்காயல்ல. சிதறு தேங்காயை உடைத்து விடலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை யாராலும் உடைக்க முடியாது. இதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.**

ஏறாவூரில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது கட்சி அரை நூற்றாண்டை கடந்து தடம் புரளாது நிலைத்து நிற்கிறது. தமிழ்த் தேசியத்தின் நன்மைக்காக, அதன் எதிர்கால நலனுக்காக அரசோடும், புதிய ஜனாதிபதியோடும் எமது கட்சி பேசும். அது எங்களுக்கு உரித்தானது. அதில் தவறில்லை. அது பற்றி ஊடகங்கள் வாயிலாகவும் தெரிவித்து விட்டோம். பட்டமும் பதவியும் எமது கொள்கையல்ல.

நாம் அவைகளுக்கு அப்பாற்பட்டவர்கள். கட்சியின் தீர்மானங்களுக்கு அப்பால் எமது கட்சிப்பற்றாளர்கள் இம்மி யேனும் நகரமாட்டார்கள்.

நான் எனது பணிப்பாளர் பதவியை இராஜினாமா செய்து விட்டே தேர்தலுக்கு முகம் கொடுத்து பாராளுமன்ற உறுப்பினராகினேன். கிளப்பப்பட்ட பிரதி அமைச்சர் பதவி கதையானது, எனக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் எமது கட்சிக்கும் புதிது. இது ஒரு புரளி. நாம் நல்லதொரு கட்சிப் பற்றாளர்களாகவே இருப்போம் என்பதை எமது மக்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை மின்சாரசபையில் இடம்பெற்ற மோசடிக்கு உடன் நடவடிக்கை எடுக்கவும்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

மின்சார உற்பத்தி குறைவடைந்துள்ளதாகவும் இதனால், மின்சார தட்டுப்பாடு நிலவுவதாகவும் பொய்யான தகவலைப் பரப்பி இலங்கை மின்சார சபைக்கு பல பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுத்திய முன்னாள் மின்சக்தி அமைச்சருக்கும் அவ்வமைச்சின் செயலாளருக்கும் எதிராக உடன் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஜனநாயக முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மின்தட்டுப்பாடு நிலவுவதாக தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தி, 2019 ஆம் ஆண்டில் மாத்திரம் 130 பில்லியன் ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தியதாகவும் இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நட்ட ஈட்டை முழு நாட்டு மக்களுக்கும் வழங்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுதந்திரக் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியவர்களுக்கு எதிராக நடவடிக்கை

## தவிசாளர் பியதாஸ திட்டவட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்கவிதிகளை மீறிச் செயற்பட்ட அனைவருக்கும் எதிராக எதிர்காலத்தில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என அந்தக் கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கட்சிக்குரிய ஒழுக்கத்தை மீறிச் செயற்பட்ட அனைவருக்கும் எதிராகவும் வெளிப்படையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# கொத்மலை நீர்த்தேக்கத்தில் யுவதியின் சடலம் மீட்பு

(கொத்மலை)

பூண்டுலோயா -கொத்மலை நீர்த்தேக்கத்தில் நேற்று முன்தினம் மதியம் யுவதியின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டது.

குறித்த சடலம் விசாரணைகளின் பின் வைத்திய பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூண்டுலோயா - ஹதானுவாவ, வட்டாந்தர பகுதியைச் சேர்ந்த 18 வயதான யுவதி கடந்த 27 ஆம் திகதி புதன் கிழமை காலை காணாமல் போயிருந்த நிலையில், பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மதியம் யுவதி சடலமாக மீட்கப்பட்டார். (இ-7)

# செய்தித்துளிகள்

## இலவச மருத்துவ முகாம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடடுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை முற்பகல் 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை சித்தன்கேணி தெல்லிப்பழை வீதியில் அமைந்துள்ள கழக செயலகத்தில் லயன் க.நந்தகுமாரின் தலைமையில் இடம்பெறும். (இ-7-104)



**புங்குடுதீவு நசரேத் சனசமூக நிலையத்திற்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 172 கதிரைகள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் சனசமூக நிலையத்தினரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.**

## கலைவிழாவும் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம், விற்றில் மாஸ்ரேஸ் மொண்டிசூரியின் கலைவிழாவும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியளவில் மல்லாகம் விற்றில் மாஸ்ரேஸ் மொண்டிசூரியில் சமாதான நீதவான் கி.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ம.சத்தியகுமார், சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சி.பிரணவசொரூபி, மல்லாகம் மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் சி.சிவகுமார், ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை ஓய்வுநிலை அதிபர் செ.சிவநடராசா (ஜே.பி). உடுவில் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி ந.சந்திரா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 150 | 250 | 200 | 210 | 300 |
| தக்காளி | 140 | 120 | 120 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 120 | 110 | 70 | 80 |
| கோவா | 100 | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 250 | 250 | 240 | 200 | 300 |
| பூசணி | 60 | 40 | 60 | 40 | 60 |
| புடோல் | 80 | 100 | 80 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 480 | 380 | 400 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 120 | 200 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 180 | 160 | 140 | 130 | 120 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 220 | 320 |
| பீற்றூட் | 160 | 150 | — | 70 | 200 |
| கறிமிளகாய் | 150 | 280 | 300 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 450 | 600 | 800 | — | 320 |
| போஞ்சி | 100 | 100 | 120 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 120 | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 80 | 50 | 60 |
| தேசிக்காய் | 100 | 150 | 150 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 40-50 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 600 | 350 | 200 | 250 |
| வெங்காயப்பூ | — | 300 | — | — | — |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 35 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 120 | 80 | 160 | 100 |




# மனிதனும் தெய்வமாகலாம்



"அப்பா! அமரர் என்றால் யார்?"

"அமரர் என்றால் தேவர்."

"தேவர் என்றால்?"

"தேவர் என்றால் தேவ லோகத்தில் அல்லது சொர்க்கத்தில் இருப்பவர். ஒருவர் இந்த உலகத்தில் இருக்கும்போது நல்ல காரியங்களைச் செய்தால், இறந்த பின் அவர் சொர்க்கத்துக்குச் செல்வார். அங்கே தேவர் போல் வாழ்வார். அதனால்தான் இறந்து போனவர்களை "அமரர்" என்று சொல்கிறோம். இறந்த பின் அவர் சொர்க்கத்துக்குச் சென்றிருப்பார் என்ற விருப்பத்திலும் நம்பிக்கையிலும் சொல்லப்படுவது இந்த வார்த்தை."

"அப்படியானால் இந்த உலகத்தில் இருப்பவர்கள் யாரும் அமரர் இல்லையா?"

"உயிரோடு இருப்பவர்களைக் குறிக்க அந்த வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை" என்றார் குணசீலன் எச்சரிக்கை உணர்வுடன்.

பள்ளியில் படிக்கும் பத்து வயது மகனின் கேள்வி குணசீலனின் மனதில் திரும்பத் திரும்ப மேலெழும்பிக்கொண்டே இருந்தது. தனக்குத் தெரிந்த மனிதர்கள் பலரை நினைத்துப் பார்த்தார். அவர்களில் யாரை யாவது கடவுளுக்கு நிகரானவர்களாகச் சொல்ல முடியுமா? தெரியவில்லை.

அவருக்கு மிகவும் விருப்பமான பழைய பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது.

"மனிதன் என்பவன் தெய்வமாகலாம்." எப்படி?

அந்தப் பாடலிலேயே சில குறிப்புகள் இருந்தன. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் தெய்வம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு எவராலாவது வாழ முடியுமா?

அன்று மாலை ஒரு ஆன்மீகச் சொற்பொழிவுக்குச் சென்றார். பேசிய அறிஞர் சொன்ன ஒரு விடயம் குணசீலனின் சிந்தனையைத் தூண்டியது. "விண்ணுலகம் சென்றால் அங்கே அமிர்தம் குடிக்கலாம். அமிர்தம் என்பது என்ன? அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஒரு பானம். இந்த மண்ணுலகத்திலேயே நமக்கு அமிர்தம் கிடைத்தால் இங்கேயே நாம் தேவ வாழ்க்கை வாழலாமே! மரணத்துக்குப் பின் கிடைக்கப் போகும் அமர வாழ்க்கையை எதிர்பார்த்து இருக்க வேண்டாமே!

"சரி, அந்த அமிர்தம் எங்கே கிடைக்கும்? குளிர்பானங்கள் விற்கும் கடைகளிலோ, மதுபானம் விற்கும் இடங்களிலோ கிடைக்குமா? கிடைக்காது. வாழ்க்கையை ஒரு இனிமையான அனுபவமாகக் கருதி, வாழ்க்கை தரும் சவால்களை எதிர்கொண்டு தன்னால் இயன்ற வரை வாழ்ந்து மற்றவர்களுக்கும் உதவியாக இருப்பவன் குடிக்கும் தண்ணீர் கூட அமிர்தம்தான். அத்தகைய மனிதர்கள்தான் தேவர்கள் அல்லது அமரர்கள்."

இந்தப் பேச்சு குணசீலனின் சிந்தனையைக் கிளறியது.

சொற்பொழிவாற்றிய பெரியவர் அவர் சொன்னது போன்ற தேவ வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பாரா? தெரியவில்லை. ஆனால் அவர் மனைவியை அவர் ஒதுக்கி வைத்திருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையாக இருந்தால் அவர் வாழும் வாழ்க்கையை தெய்வீகமான வாழ்க்கை என்று சொல்ல முடியுமா? தனது ஆன்மீகப் பணிக்கு இடையூறு வரக்கூடாது என்பதற்காக அப்படிச் செய்ததாக அவர் காரணம் சொல்லலாம், ஆனாலும் அது ஒரு களங்கம்தானே?

இதைப்பற்றி யாரிடமாவது பேச வேண்டும் என்று தோன்றியது. தன் நண்பர் பூபதியின் வீட்டிற்குச் சென்றார். பூபதி ஆன்மீக விடயங்களில் ஈடுபாடு உள்ளவர். அதனால் அவரிடம் அந்த ஆன்மீகச் சொற்பொழிவைப் பற்றிப் பேசி விட்டு மண்ணுலகிலேயே தேவ வாழ்க்கை வாழ்பவர்கள் யாராவது இருக்கிறார்களா? என்ற தனது ஐயத்தையும் வெளிப்படுத்தினார்.

பூபதிக்கும் இந்தக் கேள்விக்கு விடை தெரியவில்லை. குணசீலன் தன் கேள்விக்கு விடை கிடைக்காத நிலையில், யோசனையுடன் விடை பெற்றார்.

குணசீலன் சென்றதும், பூபதியிடம் அவர் மனைவி கேட்டாள். "என்ன உங்க ஃபிரண்ட் இந்த மாதிரி சந்தேகம் எல்லாம் கேட்கிறாரு? சந்நியாசி ஆயிடுவார் போல இருக்கே!" என்றாள்.

"அப்படி இல்லை. சிறப்பான இல்லற வாழ்க்கை நடத்தறதனாலதான் அவருக்கு இப்படிப்பட்ட சிந்தனையே வந்திருக்கு."

"எப்படிச் சொல்றீங்க?"

"இப்ப நான் என்னோட கம்பனியிலே மனேஜரா இருக்கேன். அதனால இதற்கு அடுத்தபடியான ஜெனரல் மனேஜர் பதவிக்கு உயர முடியுமான்னு யோசிக்கிறேன். நான் ஒரு கிளர்க்கா இருந்தா இப்படிப்பட்ட சிந்தனை எனக்கு வருமா? மனுஷ வாழ்க்கையைச் சிறப்பா வாழுறதாலதான் தேவ வாழ்க்கையைப் பற்றி அவரால யோசிக்க முடியுது."

"அவர் நல்ல மனுஷர்னு தெரியும். ஆனா இல்லற வாழ்க்கையைச் சிறப்பா வாழுறாருன்னு எப்படிச் சொல்றீங்க?". "அரசாங்க வேலையில இருந்தாலும் நேர்மையா இருக்கிறதனால மற்ற சிலர் மாதிரி அவரால ரொம்ப வசதியான வாழ்க்கை வாழ முடியல.

இதனால அவர் மனைவிக்கு அவர் மேல கோபம். தன்னோட கோபத்தை அவங்க தினசரி வாழ்க்கையில பல விதத்திலும் வெளிப்படுத்துறாங்க.

"ஆனா குணசீலன் அதைப் பத்திக் கொஞ்சம் கூடக் கவலைப் படாம, தன் மனைவிக்கும் மகனுக்கும் தான் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாச் செஞ்சுக்கிட்டிருக்காரு. அதோட இல்லாம மற்றவங்களுக்குத் தன்னால முடிஞ்ச உதவிகளையும் செஞ்சுக்கிட்டிருக்காரு. அவர் மனைவியோட சொந்தக்காரங்க பலருக்கே அவரு நிறைய உதவி செஞ்சிருக்காரு. அது அவர் மனைவிக்கும் தெரியும். ஆனாலும் அவங்க தன் மனசை மாத்திக்கல! மற்றவங்க மாதிரி தன்னால வசதியா, ஆடம்பரமா வாழ முடியலியேங்கற கோபம் அவங்களுக்கு நிறைய இருக்கு.

"ஆனா குணசீலன் அதைப் பற்றி எல்லாம் கவலைப் படாம, மனுஷனா இருந்துக்கிட்டே தேவ வாழ்க்கை வாழ முடியுமான்னு சிந்திச்சுக்கிட்டிருக்காருன்னா எப்படிப்பட்ட மனசு அவரோடதுன்னு பாரு!"

அவர் மனைவி மௌனமாக இருந்தாள்.

"அவர் கேட்ட கேள்விக்கு பதில் ரொம்ப சுலபம். மனுஷனா இருந்துக்கிட்டே தெய்வ வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டிருக்கிறது அவரேதான்! ஆனா நான் இதைச் சொன்னா அவரு ஒத்துக்க மாட்டாரு. அதனாலதான் நான் இந்தக் கேள்விக்கு எனக்கு பதில் தெரியாதுன்னு சொன்னேன்!" என்றார் பூபதி.

குறள் 50:

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப்படும்.

பொருள்:

இந்த உலகத்தில் வாழும் (இல்) வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்பவன் வானில் இருக்கும் தெய்வத்துக்குச் சமமாகக் கருதப்படுவான்.



கே.அக்ஷிதா, தரம் 1, யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## பாட்டி பழமொழிகள்

- இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்.
- எழுத்தறச் சொன்னாலும் பெண் புத்தி பின் புத்தி.
- மழை விட்டாலும் தூவானம் விடவில்லை.
- எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா?
- சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
- நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
- ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடையிலே.
- செருப்பின் அருமை வெயிலில் தெரியும். நெருப்பின் அருமை குளிரில் தெரியும்.
- எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளம்.
- தங்கம் தரையிலே தவிடு பானையிலே.
- வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.
- தானாகக் கனியாதது, தடிகொண்டு அடித்தால் கனியுமா?
- எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
- அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

நன்மை ஒரு நல்ல வைத்தியன். ஆனால், தீமை சில சமயங்களில் அதைவிட மிக நல்ல வைத்தியன்.
– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண சபையை குழப்பிய கர்மா சூழ்ந்ததோ!

குருஷேத்திரத்தில் போர் நடக்கிறது. நாகாஸ்திரத்தை ஒரு தடவை எய்த கர்ணன் அதனை மறுபடியும் தொடுக்கவில்லை.

இப்போது தேர்ச்சக்கரம் நிலத்தில் புதைகிறது. தேரை மீட்டெடுக்க கர்ணன் பிரயனத்தனம் செய்கிறான். முன்னம் விதித்த சாபம் சூழ்கிறது. உற்ற நேரத்தில் கற்ற கலையை மறந்து போகிறான் கர்ணன்.

சாபமும் நேரமும் விதியும் சூழ்ந்து கொள்ள பார்த்தசாரதி ஓட்டுகின்ற தேரில் நிற்கும் அருச்சுனன் கர்ணன் மீது சரமாரியாக அம்பெய்த, அந்தோ! செஞ்சோற்றுக் கடன் தீர்த்த சூரியப் புதல்வன் நிலத்திடை வீழ்ந்து கிடக்கிறான்.

கொடையின் அடையாளமாக விளங்கும் கர்ணனுக்கே இக்கதி என்றால் நாம் எம்மாட்டு.

இவை ஒருபுறமிருக்க, 2020ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டது.

வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமை யாழ்.மாநகரத்தின் ஆளும் கூட்டமைப்புக்குப் பெரும் பின்னடைவு மட்டுமன்றி பலமற்ற ஆட்சி என்பதாக நிலைமை மாறியுள்ளது.

இங்கு யாழ்ப்பாண மாநகர சபையின் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டமை பற்றி நாம் எதையும் பிரஸ்தாபிக்க விரும்பவில்லை.

ஆனால் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதால் யாழ்.மாநகர முதல்வரால் எதுவும் செய்ய முடியாத நிலைமை வந்துள்ளது.

இப்போதுகூட யாழ்.மாநகரத்தின் கழிவகற்றும் பணி பின்தங்கியுள்ளது.

ஆனால் இதே யாழ்.மாநகர சபை நிர்வாகம் சில மாதங்களுக்கு முன்னர் கழிவகற்றும் பணியை மிகச்சிறப்பாகச் செய்தது. அதுபற்றி இவ்விடத்தில் நாம் பாராட்டியும் எழுதியிருந்தோம். எனினும் சமகாலத்தில் அத்தகையதொரு சூழ்நிலை இல்லை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இங்குதான் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புத் தனக்குக் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தை யாழ்ப்பாண மாநகர முதல்வர் முன்வைக்கின்ற சூழல் ஏற்படுகிறது.

ஆக, அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்புக் கிடைத்தால் மட்டுமே நிர்வாக வண்டியை சீராகச் செலுத்த முடியும் என்ற பொதுமை உணரப்படுகிறது.

இவ்விடத்தில்தான் யாழ்ப்பாண மாநகரத்தின் கௌரவ முதல்வர் அவர்களை நடந்து முடிந்த வடக்கு மாகாண சபையின் அமர்வுகளுக்குக் கூட்டிச் செல்ல விரும்புகிறேன்.

அதோ! முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் உரையாற்றுகிறார்.

அவரை எதிர்த்து அவர் சார்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் கூச்சல் இடுகின்றனர். குழப்பம் செய்கின்றனர். நந்தவனத்தில் ஓர் ஆண்டி... என்று ஒருவர் பாடுகிறார்.

நயவஞ்சகமாக நம்பிக்கையில்லாப் பிரேரணையும் வருகிறது.

இந்நிலையில் எப்படி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சபையை இயக்குவது.

ஆம், கைதடியில் விதைத்த கர்மா நல்லூரில் பயிராக விளைச்சல் தருகிறது.

இதுவே பகவத்கீதை கூறும் தத்துவம்.

## பிரபாகரனின் படத்தை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்தவர் கைதானார்

(ஹொரணை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப் படத்தை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்த குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். ஹொரணை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர், மேலதிக விசாரணைகளுக்காக ஹொரணை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பயங்கரவாதத் தாக்குதல் சந்தேகநபர்களுக்கு மறியல்

(கல்முனை)

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 13 பேரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இது தொடர்பான வழக்கு நேற்று கல்முனை நீதவான் ஐ.என்.ரிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

### பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

16 2019

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
சமூகத்தில் இருக்கும் பால்நிலை பாரபட்சங்களை களைவதனூடாக அவர்களை சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக வலுப்படுத்துவோம்.

JSAC

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று மதியம் 12 மணியிலிருந்து 2 மணி வரை யாழ்.பிரதேசத்தில் பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரத கடவையிலிருந்து தட்டார்தெரு சந்தி வரை, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை,கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி,சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ்வீதி வரை, அசாத்வீதி, வி.ஏ.தம்பி லேன்,பிரப்பங்குளம் வீதி,பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி,கன்னாதிட்டி,மணிக்கூட்டு வீதி,சிவன் பண்ணை வீதி,காதி அபூபக்கர் வீதி, ஹரிகரன் அச்சகம் பிறைவேற் லிமிட்டட் அண்ணா மலையான் சிறி இராக வேந்திரா என்ர பிறைசஸ் பிறைவேற் லிமிரட்,வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி,ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து சத்திரசந்தி வரை,கந்தப்பசேகரம் வீதி,மகாத்மா காந்தி வீதி, முனீஸ்வரன் வீதி,கஸ்தூரியார் வீதி ஆஸ்பத்திரி வீதி சந்தியிலிருந்து வின்சர் சந்தி வரை,மின்சார நிலைய வீதி, பெரியகடை வீதி,யாழ்.கொமர்சல் வங்கி,யாழ். தேசிய சேமிப்பு வங்கி, யாழ். இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகாதாரத் திணைக்களம், கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ்.வைத்தியசாலை (மூன்று மாடிக்கட்டிடத் தொகுதி), அபி கட்டடம், யாழ்.விடுதி,பல்கலைக்கழக தங்கு விடுதி, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி,சிவன் அம்மன் வீதி,கந்தர்மடம்,அன்னசத்திரச்சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாகவிகாரையில் இருந்து பாரதியார் சிலை வரைவிக்ரோரியா வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி,யாழ் 2ம் 3ம் 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில்ஆரிய குளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்திவரை,கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண்சென்றல்கொஸ்பிற்றல்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம்,பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற் ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ்.புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறிநதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி,றொட்பாஸ்,இராமநாதன் வீதி,அரசடி வீதி,வைமன் வீதி, கோவில்வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து ஏ9 வீதி வரை, நல்லூர் கோவிலடி,றக்கா வீதி,மருதடி வீதி,சுண்டிக்குளி,பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி,ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ்.மாவட்டச் செயலாளர் அலுவலகம், பெனி சுலா புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட் (துளசி மகால்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம்,றக்கா வீதி பிரிட்டிஷ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம், US ஹோட்டல் பிரதிபொதுமுகாமையாளர் அலுவலகம் (இ.மி.ச) ஆகிய இடங்களிலும், மின் தடைப்படும்.

## ரோயல் பார்க் கொலையாளிக்கு வெளிநாடு செல்லத் தடை

(கொழும்பு)

ரோயல் பார்க் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, முன்னாள் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட ஜூட் ஸ்ரீமந்த அன்டனி ஜயமஹவிற்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்தது.

ரோயல் பார்க் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வந்த இவருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்க எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மரண தண்டனை வழங்கப்பட்டு சிறையில் இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் குறித்த நபரை மாத்திரம் தேர்ந்தெடுத்து முன்னாள் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமையானது அரசியலமைப்புக்கு எதிரானது என மனுதாரர்கள் குறிப்பிட்டனர்.

மேலும், பொது மன்னிப்பு வழங்கப்பட்ட பிரதிவாதி, தற்போதைய நிலையில் வெளிநாடு சென்றுள்ளதாக மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து குறித்த மனு விசாரணையை எதிர்வரும் மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிபதிகள் குழாம், பிரதிவாதியான ஜூட்ஸ்ரீமந்த அன்டனி ஜயமஹவிற்கு வெளிநாடு செல்ல தடை விதித்து இடைக்காலத் தடையுத்தரவும் பிறப்பித்தது. (இ-7)

## சர்வதேச கூட்டுறவு தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் சர்வதேச கூட்டுறவு தின விழா இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ் மாவட்ட சி.க.கூ.ச. சமாசத் தலைவர் வீ.கே.அருந்தவநாதன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான பொ.வாகீசன் கலந்து கொள்வார். (இ-5)

## நாவலர் விழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் உடுவில் கிழக்கு பாலர் பாடசாலை புதிய கட்டடத்திறப்பும் நாவலர் விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் உடுவில் கிழக்கு பாலர் பாடசாலையில் மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இதில்பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த், வலிகாமம் வலயமுன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன், இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி பகீரதி கேசவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"அடர்ந்த காட்டின் நடுவில் ஏற்படக்கூடிய அபாயம் சன நெருக்கமுள்ள நகரத்தின் தெருவைக் கடக்கும் ஒரு பாதசாரிக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை விடக் குறைவானதாகவே இருக்கும் என்று அடித்துச் சொல்லலாம்"

-ஹென்னத் அன்டர்சன் (வேட்டைக்காரராக இருந்து இயற்கையியலாளராக மாறியவர்)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வெளியே இருக்கும் வறுமையைவிட மனதில் உள்ள வறுமையே அபாயமானது.

-டாக்டர் ராதாகிருஷ்ணன்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கடவுள் என்றும் இருக்கிறார்



வாழ்க்கை என்பது நிலையற்றது. கலைகின்ற கனவு அது. அழகும் வாலிபமும் வாடிவிடும். நீயே என் தாய், என் தந்தை, என் கணவன், என் அன்பு, என் பிரபு, என் கடவுள், எனக்கு நீயே வேண்டும். வேறு எதுவும் தேவையில்லை. நீ என்னில், நான் உன்னில். நீயே நான், நானே நீ என்று பகலிரவாகச் சொல்லுங்கள். செல்வம் போய்விடும். அழகு அழிந்து விடும். வாழ்க்கை வாடிவிடும். ஆற்றல்கள் அழிந்து விடும். ஆனால் கடவுள் என்றும் இருக்கின்றார். அன்பு எப்போதும் இருக்கிறது.

எந்திரமாகிய இந்த உடலை நன்றாகச் செயற்பட வைத்துக் கொண்டிருப்பது பெரிய விடயம்தான். ஆனால்ஆன்மாவை உடலின் துயரங்களில் பங்குபெறாமல் பிடித்து வைப்பது அதைவிடப் பெருமை வாய்ந்தது. அப்படி ஜடத்தை தனியாக இயங்க விடுவது தான் நீங்கள் ஜடம் அல்ல என்பதற்கு அத்தாட்சி.

# தேசிய ரீதியிலான விளையாட்டுப்போட்டி; கிளிநொச்சி கல்வி வலயம் முன்னிலையில்



விசேட கல்வி மாணவர்களின் தேசிய ரீதியிலான போட்டிகள் கடந்த வாரம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் மத்திய கல்வியமைச்சினால் நடத்தப்பட்டது. இதில் கிளிநொச்சி கல்வி வலய விசேட கல்விப் பிரிவு 36 மாணவர்கள் கலந்து கொண்டு கடுமையான போட்டியில் 30 பதக்கங்களை தேசிய ரீதியாக தனதாக்கிக் கொண்டனர். இதில் 12 தங்கப் பதக்கங்கள், 10 வெள்ளிப் பதக்கம், 08 வெண்கலப் பதங்கங்களுடன் இரண்டு தேசிய சம்பியன்களையும் பெற்றுக் கொண்டனர். 14 வயது பிரிவு பெண்களுக்கான 50 மீற்றர் ஓட்டம், 30 மீற்றர் ஓட்டம், பந்தெறிதல் மூன்று போட்டிகளிலும் முதலிடம் பெற்ற கிளி/புன்னைநீராவி அ.த.க.பாடசாலை மாணவி சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டதுடன் குழு விளையாட்டில் 16 வயது பிரிவு ஆண்களின் ஆண்கள் அணி முதலாம் இடத்தினைப்பெற்று தேசிய சம்பியனாகியதுடன் பெண்கள் அணி 3 ஆம் இடம் பெற்றுக் கொண்டது. (கு)

## பட்டம் விடும் போட்டி

வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையம் மற்றும் வல்லை உதயசூரியன் கழகம் ஒன்றிணைந்து நடத்தும் மாபெரும் பட்டம் விடும் போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வல்லை உதயசூரியன் உல்லாச கடற்கரை வெளியில் நடைபெறவுள்ளது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





சுவீடன் நாட்டின் போராஸ் நகரில் நடைபெற்ற கிங் ஒவ் த ஷரிஷ் சர்வதேச குத்துச் சண்டை போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மாணவன் விக்னேஸ்வரன் ஷானுஜனுக்கு நேற்று வெள்ளிக்கிழமை மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. (க-60)

# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு விசாவை நிராகரித்தது அமெரிக்கா

இலங்கை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியினருக்கு, அமெரிக்கா விசா நிராகரிக்கப்பட்ட பின்னர் வீரர்கள் கரீபியனுக்கு புறப்படுவது தடைப்பட்டுள்ளது.

19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் வீரர்கள் அமெரிக்கா வழியாக ஆன்டிகுவாவுக்கு பயணிக்க திட்டமிடப்பட்டிருந்தனர்.

ஆனால் ஏழு வீரர்களின் விசா விண்ணப்பங்கள் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நிராகரித்ததை அடுத்து அவர்கள் புறப்படுவது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கரீபியனில் நடைபெறவிருக்கும் முத்தரப்பு போட்டிகளில் விளையாட மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் இங்கிலாந்து 19 வயதுக்குட்பட்டோர் அணிகளுடன் இலங்கை 19 வயதுக்குட்பட்டோர் அணியும் பங்கேற்க இருந்தது.

இத்தொடரில் விளையாடுவதன் மூலம் அடுத்த ஆண்டு தென்னாபிரிக்காவில் . நடைபெறும் ஐ.சி.சி. இளைஞர் உலகக் கோப்பைக்கு முன்னதாக, ஜூனியர் கிரிக்கெட் வீரர்களுக்கு மிகவும் தேவையான அனுபவம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வீரர்களை கரீபியனுக்கு அழைத்துச் செல்வதற்கான மற்றொரு வழியைக் கண்டறிவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆனால் அவர்கள் புறப்படுவது அடுத்த வாரத்திற்கு தள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும் இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன.

போட்டியின் முதல் ஆட்டம் டிசெம்பர் 6 ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ளதால் இலங்கை அணிக்கு நேரம் குறைவாக இருப்பதாக கூறப்படுகிறது. (க)

# அகில இலங்கை விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி

யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலய மாணவன் இராசேந்திரம் கஜன் இம் மாதம் சுகத்தாச விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கை விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாடப் போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் 75 மீற்றர் ஓட்டம் , 100 மீற்றர் ஓட்டம், தட்டெறிதல் ஆகிய போட்டியில் முதலிடங்களைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். (கு)

# மஹேல ஜெயவர்த்தன படைத்த சாதனை

இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் துடுப்பாட்ட சராசரி நாற்பதுக்கு மேல் மற்றும் ஒரே ஆண்டில் 1000 ஓட்டங்களுக்கு மேல் குறித்த வீரர்களின் வரிசையில் இலங்கை வீரர் மஹேல ஜெயவர்த்தனே இடம் பிடித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டியை விறுவிறுப்பாக முதலில் டெஸ்டில் இருந்து ஒருநாள் போட்டி வந்தது. ஒரு நாள் போட்டியும் அதிகம் நேரம் இழுப்பதாகவும் ரசிகர்களுக்கு சுவாரசியமாகவும் பரபரப்பாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக 20 ஓவர் போட்டி கொண்டு வரப்பட்டது.

இந்த இருபது-20 தொடர்களில் வீரர்கள் பலரும் பல சாதனைகள் படைத்துள்ளனர். இந்திய வீரர் யுவராஜ்சிங் 6 பந்துகளுக்கு 6 சிக்ஸர் அடித்தது. மேற்கிந்தியத்தீவு வீரர் கிறிஸ் கெய்லின் முதல் சதம் போன்று பல உள்ளன.

அந்த வகையில் ஒரே ஆண்டில், துடுப்பாட்ட சராசரி 40 இற்கு மேலும் ஸ்டிரைக் ரேட் 145 இற்கும் மேலும் ஒரே ஆண்டில் 1000 ஓட்டங்களுக்கு மேல் குவித்த வீரர்களின் பட்டியலை பிரபல ஊடகம் வெளியிட்டுள்ளது.

அதில் இலங்கையை சேர்ந்த ஜாம்பவான் மஹேல ஜெயவர்த்தன 2010 ஆம் ஆண்டு 32 இருபது-20 போட்டிகள் விளையாடி 1156 ஓட்டங்கள் குவித்துள்ளார். துடுப்பாட்ட சராசரி 41.28 எனவும் ஸ்டிரைக் ரேட் 152.7 எனவும் 2 சதம் மற்றும் 8 அரைசதம் அடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

அதிகபட்சமாக மேற்கிந்தியத் தீவு வீரர் கிறிஸ கெய்ல் 2015 ஆம் ஆண்டு 36 போட்டிகளில் 1665 ஓட்டங்கள் குவித்துள்ளார். அதேசமயம் இந்திய வீரர் ஹோலி 2016 ஆம் ஆண்டு 31 போட்டிகளில் 1614 ஓட்டங்கள் குவித்துள்ளார். இந்தப் பட்டியலில் இலங்கை வீரர் ஜெயவர்த்தனவை தவிர மற்ற இலங்கை வீரர்களின் பெயர்கள் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. (க)

# ரிஷப் பந்த் தன்னை நிரூபிக்க வேண்டும் இந்திய முன்னாள் வீரர் லக்ஸ்மன் வேண்டுகோள்



ரிஷப் பந்த் தன்னை நிரூபிக்கத் தவறினால் வாய்ப்பை இழந்து விடுவார் என்று முன்னார் வீரர் வி.வி.லக்ஷ்மணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர், "மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில், சஞ்சு சாம்சன் சேர்க்கப்பட்டிருப்பது, ரிஷப் பந்துக்கு எச்சரிக்கை தரும் செய்தியாக அமைந்துள்ளது. இனிவரும் போட்டிகளில், ரிஷப் பந்த் தன்னை நிரூபிக்க வேண்டும். அல்லது சஞ்சு சாம்சனுக்கு வழிவிட வேண்டும்.

ஏனெனில், ரிஷப் பந்துக்கு அணியின் தேர்வுக் குழுவினர் ஏராளமான வாய்ப்பு தந்து விட்டனர். இதனால், சஞ்சு சாம்சனின் வருகை ரிஷப் பந்திற்கு நிச்சயம் எச்சரிக்கையாக இருக்கும்.

ரிஷப் பந்த் பலமுறை பல்வேறு விதமான மனநிலையில் களமிறங்கி, சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக மோசமான முறையில் ஆட்டமிழந்துள்ளார்.

அடுத்த ஆண்டு இருபது-20 உலகக்கோப்பை போட்டிக்கு சஞ்சு சாம்சன் பெயர்தான் இருக்கிறது. அதேசமயம் டோனியையும் மறக்கவில்லை. ரிஷப் பந்த் மற்றும் சஞ்சு சாம்சன் இனி எவ்வாறு விளையாடப் போகிறார்கள் என்பதை பொறுத்து டோனிக்கு வாய்ப்பு வழங்கப்படும்" என்று வி.வி.லக்ஷ்மணன் தெரிவித்துள்ளார். (க)

## மழை தொடரும்...

ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை, பொல நறுவை, பதுளை மாவட்டங்களின் சில இடங்களில் 100 முதல் 150 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப் படுகிறது. (ம-3)

## பதவியிலிருந்து...

துத் தெரிவித்துள்ள சபாநாயகர் கரு ஜய சூரிய, பதவியிலிருந்து சுயமாக விலகிச் செல லாது தனது சேவைக்காலம் முடியும் வரை இருந்து, மக்களுக்கான சேவையைச் செய்யு மாறு மகிந்த தேசப்பிரியவிடம் கோரியுள் ளார். (ம-3)

## ரயிலில் பிச்சை...

தடையை மீறி ரயிலில் பிச்சை எடுக்கும் நபர்களுக்கு எதிராக கடும் தண்டனை வழங் கப்படும் என ரயில் சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள் ளது.

கொழும்பு உட்பட முக்கிய நகரங்களில் இருக்கும் பிச்சைக்காரர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகரங்கள் தூய்மை மற்றும் அழகுபடுத் தும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் உத்தரவின் பேரில் இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தமிழ் மக்கள்...

நேற்று முற்பகல் புதுடில்லியில் சந்தித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட ஐ.நா. தீர்மானம், இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை, தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை, வடக்கு, கிழக்கில் இந்திய நிதியுதவியில் தமிழ் மக்களுக்கு வீடு கட்டும் திட்டம், திருகோணமலை எண ணெய் கிடங்கு விவகாரம், தமிழர் பகுதி களை இணைக்கும் ரயில் பாதை திட்டம் போன்ற பல முக்கிய விடயங்கள் தொடர் பான இந்திய மத்திய அரசின் நிலைப் பாட்டை கோட்டாபயவிடம் ஜெய்சங்கர் இதன்போது எடுத்துரைத்துள்ளார். (ம-3)

## தாலிக்கொடி உட்...

யில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவ தாவது,

புத்தூர் வீதிக்கருகாமையில் உள்ள வீட் டில் அதிகாலைவேளை யன்னல் கதவினை கழற்றி உள்நுழைந்த திருடர்கள் உள் அறையில் அலுமாரிக்குள் வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி, காப்பு, சங்கிலி உட்பட 20 பவுண் தங்க நகைகளை களவாடிச் சென்றுள் ளனர்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற் கொண்டதுடன் தடயவியல் பொலிஸாரும் மோப்பநாயின் உதவியுடன் சோதனை களை மேற்கொண்டுள்ளனர். (ம-78)

## நல்லிணக்க...

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண் டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொண்ட பின்னர் உரையாற்றும்போதே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நரேந்திர மோடி மேலும் தெரிவிக்கை யில்,

இலங்கையில் தமிழ் மக்களின் சமத் துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகி யவை குறித்த அபிலாஷைகளை நிறை வேற்றும் நல்லிணக்க நடைமுறையொன்று முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கின் றேன்.

நாங்கள் அயல்நாடுகளுக்கு முன்னு ரிமை என்ற கொள்கையை பின்பற்று கின் றோம். அந்தவகையில், ஸ்திரமான மற்றும் வளமான முன்னேற்றகரமான இலங்கை இந்தியாவின் நலனுக்கு மிகவும் உகந்த விடயம். இது முழு இந்து சமுத்திரத்திற்கும் நன்மையளிக்கக்கூடிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## கணவனை அடி...

மனைவி தாக்கியதில் கணவன் உயிரிழந் தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு கிரான் கோரக்கல்லிமடு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மனைவியை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கிரான், கோரக்கல்லிமடு, முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த 49 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தையான பிள்ளையான் பாலசுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணி யளவில் கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட சண்டை காரணமாக மனைவி திருகு வலைக் கட்டையினால் கணவன் மீது தாக்குதல் மேற்கொண்டதையடுத்து கண வன் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந் துள்ளது

குறித்த தாக்குதலை மேற்கொண்டார் என சந்தேகத்தில் மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர். உயிரிழந்தவர் முன்னாள் போராளி என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (ம-3)

## கள்ளர்களுக்கு...

நடக்க ஆரம்பித்து விட்டது.

இப்போது உருவாகும் இந்த சூழல் மிக வும் மோசமான நிலையில் முடியும். தமக்கு எதிராக எழும் குரல்களுக்கு முகங்கொடுக்க முடியாத நிலையில் குறித்த நபர்களை அச்சுறுத்தி, சாட்சியங்களை திரிபுபடுத்தி நீதிமன்றத்தின் மீது அழுத்தம் பிரயோகித்து குற்றவாளிகள் தப்பிக்கும் நடவடிக்கையே யாகும்.

பல குற்றங்கள் குறித்து ஆராய ஆரம் பித்த நபர்கள் மீதான அச்சுறுத்தல் காரண மாக முக்கிய அதிகாரிகள் நாட்டினை விட்டு வெளியேற வேண்டிய நிலை உருவாகி யுள்ளது.

மத்திய வங்கி ஊழலில் குற்றவாளிகள் என கூறிவந்த ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் சுதந்திரமாக இன்னமும் நடமாடுகின்றனர்.

இவர்களை காப்பாற்றுகின்றோம் என எம்மையும் விமர்சித்தவர்கள் ஆட்சிக்கு வந்ததும் ஏன் ரணில், ரவி ஆகியோருக்கு எதிராக விசாரணைகளை நடத்தவில்லை. ஆனால் விசாரணைகளை நடத்திய அதி காரிகளை நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையை எடுக்கின்றனர்.

இன்று கள்ளர்களுக்கு பயந்து பொலிஸார் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைமை உரு வாகியுள்ளது.

அரசாங்கம் அவ்வப்போது என்ன நினைக் கின்றதோ அதை செய்கின்றனர். இது நகைப் புக்குரிய விடயமாகும். அமைச்சரவை நிய மனங்களை பார்த்தாலும், மூன்றில் மாத கால குறுகிய காலத்தில் அளவுக்கு அதிக மான நியமனங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

முதல்நாள் இரவு பிரதியமைச்சர்களாக இருந்தவர்கள் அடுத்த நாள் காலையில் இராஜாங்க அமைச்சர்களாக மாறியுள்ள னர். இடைக்கால அமைச்சரவையிலேயே இந்த நிலைமை என்றால் ஆட்சியை கையில் எடுத்தால் நிலைமைகள் என்ன வாகும். மக்களிடமே நாம் இந்த கேள்வியை கேட்கிறோம்.

மக்கள்தான் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும் என அவர் இதன்போது தெரி வித்தார். (ம-3)

## பீடி இலைகள்...

பீடி இலைகள் மேலதிக விசாரணைக்காக யாழ்ப் பாணம் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வவுனியாவில் 510 பேருக்கு டெங்குத் தொற்று

(வவுனியா)

வவுனியாவில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இன்று வரையான காலப்பகுதியில் 510 பேருக்கு டெங்கு தொற்று ஏற்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13.09.2019 அன்றிலிருந்தே உள் ளூர் தொற்றுக்கள் அதிகளவில் ஏற்பட்டுள் ளது. தற்போது பெய்துவரும் பருவ மழை யினால் மேலும் டெங்கு நுளம்புகள் பெருக் கெடுக்கும் அபாய நிலை காணப்படுகின்றது.

இன்றைய தினம் பொலிஸாருடன் இணைந்து நகரில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் பார்வையிடப்பட்டு நுளம்புகள் பெருக்கெடுக்கும் இடங்கள் அவதானிக்கப் பட்டால் உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே தங்களது இருப்பிடப் பகுதிகளை தூய்மையாகவும் சுத்தமாகவும் துப்புரவு செய்து வைத்திருக்குமாறும் பொதுச் சுகாதா ரப் பிரிவினர்களின் டெங்கு ஒழிப்பு செயற் றிட்ட நடவடிக்கைக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறு வவுனியா பொது சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-3,250,299)

## இந்திய மீன...

உறுதியளித்துள்ளார்.

பிரதமர் மோடியுடன் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற கூட்டு செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்கு வந்துள்ளேன்.

தனது பதவிக் காலத்தில் வரும் முதலா வது வெளிநாட்டு அரச தலைவராக இலங்கை வருமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அழைப்பு விடுத்துள்ளார்.

இரு அரச தலைவர்களும் நேற்று சந் தித்துகொண்டபோது அவர் இவ்வழைப்பை விடுத்துள்ளார்.

இதன்போது, 400 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை இலங்கைக்கு வழ ங்க இந்திய பிரதமர் இணக்கம் தெரிவித் துள்ளார்.

இதில் 50 மில்லியன் டொலரை, தேசிய பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு பயன் படுத்துவதற்காக வழங்குவதாகவும் அவர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

மெகா பவர்
திகதி 2019/11/29
சீட்டிழுப்பு இலக்கம் 0465
B 13 11 51 53 54

என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா
தன நிதானய
திகதி - 2019.11.29
சீட்டிழுப்பு இலக்கம் - 232
J 05 08 12 52

மஹஜன சம்பத
திகதி 2019/11/29
சீட்டிழுப்பு இலக்கம் 4059
O 1 9 2 0 3 3

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2315
F 19 22 44 55

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 806
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.11.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 68,731,715/-
03 17 44 73 R

கொவிஜன கப்ருக
G 18 36 44 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் 79,436,950/=
முதலாம் பரிசு இல: 1089131
இரண்டாம் பரிசு இல: 725114
சீட்டிழுப்பு வாரம்: 526
திகதி: 2019 நவம்பர் 29
வர்ணம்: பச்சை வெள்ளி

ராசி அதிர்ஷ்டம்
திகதி 29/11/2019 வெற்றி வாரம் 2692 வர்ணம் கருநீலம்
சிம்மம் 15 28 61 62
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,065,776
2019/11/30 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 301
சீட்டிழுப்பு திகதி 29.11.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 09 52 62
விதி எண் 7
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 47,733,012
2019.12.04 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## வீடு விற்பனைக்கு



கொழும்புத்துறை எழிலூரில் இரண்டு கடைகளுடன் கூடிய அழகிய புது மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (கீழ் மாடியில் 3 அறைகள் மேல் மாடியில் 3 அறைகள் மற்றும் குளியலறை கொண்டது.)

தொடர்புகளுக்கு - 076 799 5582 (1324)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna. (1187)

## NEW SCIENCE WORLD

COM.MATHS DAY CLASSES

• சட்டப்படல் • மூட்டியகோல்

ஆரம்பம் :- 02.12.2019 (திங்கள்)

MONDAY TO FRIDAY 7.30 am - 9.30 am

By : K.ஐங்கரன் B.Sc (8375)

# பாராட்டு விழா



## பரமநாதன் கணேசன்

(பிரபல உயர்தர கணிதபாட ஆசான்)

காரைமண் பெற்றெடுத்த கணிதத்தின் வித்தகன் பரமநாதன் கணேசன் அவர்கட்கு அவரது ஆசிரியர் சேவையைப் பாராட்டி 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு களபூமி கல்வி அபிவிருத்திக் கழகத்தினால் நிகழ்த்தப்படும் பாராட்டு விழா சிறப்புற வாழ்த்துவதோடு இந் நிகழ்வில் அவரது மாணவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

களபூமி கல்வி அபிவிருத்தி கழகம், களபூமி, காரைநகர்

அனுசரணை : B.ரவீந்திரன் (மாணவன்)

V.C.M கல்வி நிறுவனம் K.K.S வீதி, யாழ்ப்பாணம். (1321)

## MATHS GROUP/PERSONAL CLASSES

தரம் 6 இலிருந்து (O/L) வரையான கணித குழு மற்றும் தனிப்பட்ட வகுப்புக்களுக்கு (தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி மூலமான) தொடர்பு கொள்ளவும்

Mr. S.THARSHAN (JP)

077 454 0529

குறிப்பிட்ட சில வகுப்புக்களுக்கு மாத்திரமே அனுமதி உண்டு.

புதிய தரம் 6 வகுப்புக்கள் (ஆங்கில மொழி/ தமிழ் மொழி மூலமான) இனுவிலில் ஆரம்பம் (1199)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 / 021 567 1532

## நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்

கல்வியாண்டு 2020

தரம் 3 முதல் 11 வரை தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்.

ஆரம்பம் 01.12.2019 ஞாயிறு 7 மணி

• மல்ரி மீடியா மூலம் கற்பிக்கப்படும். (C-8346)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்) (1328)

## கணித வகுப்பு

தரம் 6 முதல் O/L வரையான கணித பாட வகுப்புக் கள் பல வருட அனுபவம் கொண்ட ஆசிரியரினால் வாராந்த, மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன் Past Paper, Model Paper, மாகாணமட்ட வினாத்தாள் கள் என்பனவற்றிற்கு ஊடாக கோண்டாவிலில் கற்பிக்கப்படுகின்றன. வீடு வந்தும் சிறு குழுவகுப்பு கள், தனியாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு - 077 577 6999 (1321)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட (பிறொயிலர்) கல்பேட், ஊர்ச்சேவல் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்

இல.19, முருகேசர் லேன், நல்லூர்.

077 712 6536 (1325)

## விடுமுறை கால விசேட ஆங்கில வகுப்புகள்

- For Teachers, Officers House wifes & Students
- Personel & Group Classes
- Grammar & Fluency Guaranteed

In Kokuvil, Jaffna.

(1327) Mob : 077 478 7007

## வாடகைக்கு

பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் மாடி வீட்டின் மேல் பகுதி வாடகைக்கு உண்டு. (5 அறைகளைக்கொண்டது.)

T.P : 076 759 3822 (1323)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg (நிபந்தனைகளுக்கு (உட்பட்டது)

0768226240 (C-8115)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

V2 TRAVELS

## Study in ITALY

ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

Why Study in ITALY ?

Admission open for 2020 Intake



- Bachelors & Master Degree
- Study in English Medium
- Scholarship up to 5,200 Euro
- No IELTS / TOFEL
- கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
- 100% விசா உத்தரவாதம்.
- குறைந்த பாட நெறி கட்டணம்
- Schengen visa

➡ Limited Seats Available

iCS Study Abroad

Admissions :- 077 301 3060

77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்) 021 492 6222

107 B 1/1 . Galle Road . Colombo 6 (C-8376)

## VIJAENTHIRAN MATHEMATICS CENTER

K.K.S வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

இணைந்த கணிதம் :- தெ.விஜேந்திரன் (BSc,Dip in Ed)

Day - 2020 ஆரம்பம் 02.12.2019 திங்கள் பிற்பகல் 1.30 – 3.15

• Day - 2020 H.A.C சித்தன்கேணியில் திங்கள், புதன், வெள்ளி – 6.00 PM - 8.00 PM

• என்னிடம் கற்ற பொறியியல் பீடத்திற்கு தெரிவான நிலை 4 உட்பட ஏனைய 13 மாணவர்களும் எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளர்களாக மிளிர வாழ்த்துகின்றேன். தொடர்புகளுக்கு - 077 441 3087 (1330)

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8255)

## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

தரம் 3 முதல் O/L வரை

கல்வியாண்டு - 2020

ஆரம்பம் 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 9.15 மணி (C-8360)

T.P:- 0774598440


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.